உ

ஓம் கணபதி துணை.

சந்திர காவியம்

மூலமும் - உரையும்

மதுரை புக்ஷாப்

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

வெளியிட்டது.

காப்பிரைட்] 1936 [[redacted]

உ

ஓம் கணபதி துணை.

சந்திர காவியம்

மூலமும் - உரையும்

இஃது

சதாசிவ சோதிடரவர்களால்
இயற்றிய மூலபாடத்திற்கு
மதுரை வித்வான்,
ந. குப்புசாமி சோதிடர் அவர்களால்
உரையெழுதப்பெற்று

மதுரை - புக்ஷாப்
பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
வெளியிடப்பெற்றது.

[காப்பிரைட்] 1936 [விலை அணா 8.

நூன்முகம்

உலகின் கண்ணுற்பவித்த ஜீவகோடிகளிற் சிறந்த ந
ளுக்கேற்படும் யோகம், அவயோகம், ரோகம், கண்ட
சோபனமங்கள களத்திர புத்திராதிகள் மரணகால நிச்
திசாபுத்தி சித்திரங்களில் நடக்கும் பலாபலன்கள் முதல
துவாதசப் பலன்களும் ஒருங்கே தெரிந்துகொள்ளு
பொருட்டு மகரிஷிகளால் இயற்றப்பெற்றதும் வேதாங்க
களில் ஒன்ருகி விளங்குகின்ற சோதிட சாஸ்திரங்களி
சாராம்சங்களை நன்குணர்ந்த சதாசிவசோதிடர் என்பவ
சோதிடர்களுக்கு முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்
அம்சங்களை "சந்திர காவியம்" என்ற பெயரமைத்து வெ
பாவாக முன்னுள தன்னல், இயற்றியுள்ள நூலிற்கு இங்ஙா
என்னல், உரை யெழுதியதை மெஸர்ஸ், பி. நா. சிதம்
முதலியார் பிரதர்ஸ் அவர்களால் அச்சிட்டு வெளிவந்திரு
தால் இதனை யெனது சகோதரர்கள் ஒவ்வொருவரும் தங்
தங்கள் கரங்களில் தாங்கி அதன் பொருட்களை நன்கறிந்
சோதிடஞ் சொல்ல வல்லீராவீரென நம்புகிறேன். சுபம

இங்ஙனம், தங்களன்புள்ள

த. குப்புசாமி சோதிடர்,

மதுரை.

உ

ஓம் கணபதி துணை.

சந்திர காவியம்

மூலமும் - உரையும்

காப்பு.

வேண்பா.

பூவிலுறும் மாந்தர் புரிந்ததவப் பேறிணங்க
மேவிவருஞ் சீரனைத்தும் விள்ளுதற்கென்-நாவிற்
கலைமகளும் நின்றருளக் கந்தன் கணேசன்
மலைமகளுங் காத்திடவே வந்து.

(இதன்பொருள்) பூமியிற் பிறந்த புண்ணிய சீலர்கள் புரிந்ததவத்திற் கேற்றவாறு ஒவ்வொருவரையும் வந்தடைகின்ற யோகம் முதலிய சகல பல பாவகங்களையுங் கண்டு சொல்லுதற்கு எனது நாவில் கலைமகளாகிய சரஸ்வதியானவள் குடியிருக்கவும், கணபதியும், கந்தனும், பராசக்தியும், முன்வந்து பாதுகாத்தருள்வாராக என்றவாறு.

நூல்.

அஞ்சொன்ப துக்கதிபர் பாவர் சுபராகில்
மிஞ்சுபல னைத்தருவர் மென்மூன்ரு—றெஞ்சுபதி
ஞென்றுக் கதிபதியு மிப்படியே யொன்றிவரிற்
பொன்றசுப மேகொடுப்பார் பூண்டு.

(இ-ள்) அன்னையின் கருப்பையுட் கருவுற்று உருப்பெற்று பூமியிற் பிறக்கின்ற மனிதர்களின் ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திற்குடையவர்கள் பாவக்கிரகங்களாக இருந்தாலும் அல்லது சுபக்கிரகங்களாக இருந்தாலும் அவ்விருவகுப்பினரும், மிகவும் நல்ல பலன்களையும் அச்சாதகனுக்குக் கொடுப்பார்கள். இஃதன்றியும் மேற்படி ஜென்மலக்கினத்திற்கு, மூன்றாமிடம், ஆறாமிடம், பதினோராமிடத்திற்குச் சொந்தமான கிரகங்கள், பாபர்களாகிலுஞ், சுபர்களாகிலும், மேற்சொல்லிய நற்பலன்களைக் கொடுக்காமற் கெட்டபலன்களைக் கொடுப்பார்கள் எ-று. (1)

சுபர். சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன்.
பாபர். சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது.

நிசகேந்தி ராதிபதி நீதிசுப ராஞல்
அசுபபல னேகொடுப்ப ரல்லால்—இசைகேந்
திரபதிகள் பாவிகளாய் சேரிற் சுபங்கள்
பரவி யிடக்கொடுப்பர் பார்.

(இ-ள்) ஒரு ஜாதகன் பிறந்த ஜென்மலக்கினத்திற்கும், நான்காமிடத்திற்கும், ஏழாமிடத்திற்கும், பத்தாமிடத்திற்கும், கேந்திரஸ்தானங்களென்று பெயர். இந்தஸ்தானங்களுக்குடையவர்கள் சுபக்கிரகங்களாகிற் சொல்லுதற்கரிய துற்கிருத்தியங்களையும், துற்பலன்களையுங் கொடுப்பார்கள். அன்றியும், மேற்சொல்லிய நான்குஸ்தானங்களுக்குச் சொந்தமானவர்கள் பாபக்கிரகங்களாக இருப்பார்களாகில் மட்டற்றச் சுபபலன்களையுங் கொடுப்பார்கள் எ-று. (2)

கிரகங்களின் சொந்த வீடுகளாவன: சூரியனுக்குச் சிம்மம். சந்திரனுக்குக் கடகம். செவ்வாய்க்கு மேடம், விருட்சிகம். புதனுக்கு மிதுனம், கன்னி. வியாழனுக்கு தனுசு, மீனம். சுக்கிரனுக்கு இடபம், துலாம். சனிக்கு மகரம், கும்பம். இராகு கேதுகளுக்குச் சொந்த வீடில்லாததினல் எந்த வீட்டிலிருக்கிறார்களோ அந்த வீட்டுக்குடையவன் தரக்கூடிய பலனையும் அவர்களுடன் கூடியிருக்கின்றவர்களில் பலம்பொருந்தியவர்கள் கொடுக்கக்கூடிய பலன்களையுங் கொடுப்பார்கள்.

பாரதனிற் சுக்கிரனும் பண்டேவர் தங்குருவும்
ஆர்கேந்தி ராதிபதி யாஞக்காற்—றேர்மிகவும்
பாவியவர் பின்னும் பகர்புந்தி பாவியலாற்
றேய்மதியும் பாவியாந் தேர்.

(இ-ள்) மேற்கவியிற் சொல்லப்பெற்ற கேந்திரஸ்தானங்களாகிய ஒன்றாமிடம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடத்திற் குடையவர்களில் அசுரர்களுக்குக் குருவாகிய சுக்கிரனும், தேவர்களுக்குக் குருவாகிய வியாழனுமாகில் அவர்களிருவரும் பூரணமான பாவிகளென்றும், அவர்களைப் பார்க்கிலும் புதனானவன் குறைந்தபாவியென்றும், புதனைப் பார்க்கிலும் தேய்ந்து வளரக்கூடிய சந்திரனானவன் குறைந்த பாவியென்றும் தெரிந்துகொள்வாய் எ-று. (3)

தேறுமந்தப் பாவிகளிற் சேய்கேந்தி ராதிபஞ
யாறி லநேகநல்ல னல்லாமல்—வீரசனி
நல்ல னதைவிட்டால் நன்கிரவி தானுஞ்சேய்
வல்லகோ ணேசனெனின் மாண்பு.

(இ-ள்) இன்னும் மேற்கூறிய கேந்திரஸ்தானங்களுக்குச் சொந்தமானவர்கள் பாபக்கிரகங்களாகில் சுபபலன்களைத்

தருவார்களென்றும், அவர்களில் செவ்வாயானவன் உயர்ந்த சுபனென்றும், செவ்வாய்க்கு அடுத்த சுபன் வீரம்பொருந்திய சனியென்றும், சனிக்கு அடுத்த சுபன் சூரியனென்றுஞ் சொல்வார்கள். ஆகிலும் செவ்வாயானவன் கேந்திராதிபத்தியத்துடன் திரிகோணாதி பத்தியமும் பெற்றிருப்பானாகில், அச்செவ்வாயானவன் இச்சாதகனுக்கு நித்தியானந்த சுபகரமாகிய பலன்களை சதா கொடுத்துக்கொண்டிருப்பான் எ-று. (4)

எட்டுக் கதிபதியும் பாக்கியத்துக் கேவசையாய்
தொட்ட வியாதிபனாய்த் தோன்றுமந்த - வட்டமத்
காதிபதி பொல்லா னவனிலக்கி னாதிபனா [துக்
யோதி லநேகநல்ல னோங்கு.

(இ-ள்) எட்டாமிடமானது பிதுர்பாக்கிய ஸ்தான் மாகிய ஒன்பதாமிடத்துக்கு விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடமாகையால் அந்த எட்டாமிடத்திற்குடையவன் பாவியாம். அப்பாவியானவன் இலக்கினத்திற்குடையவனாகில் அவனுக்கொப்பாகியச் சுபக்கிரகங்களொருவரு மில்லாமையால், அச்சாதகனுக்கு இச்சையான சுப பலன்களை இச்செகம் மெச்சும்படியாகக் கொடுப்பான் எ-று. (5)

ஓங்குமட்ட மாதிபதி யோர்தோடஞ் சூரியற்கு
மேங்கு மதிதனக்கு மில்லையே—பாங்கல்லால்
வேறு மொருமதத்தில் வீழ்தோடங்கொஞ்சமெனத்
தேறியிடச் சொல்வதெனத் தேர்.

(இ-ள்) மேற்சொல்லிய அட்டமாதிபத்திய தோடமென்ற எட்டாமிடத்திற்குடைய தோடமானது புவியெங்கும்

பிரகாசிக்கின்ற சூரியனுக்குஞ் சந்திரனுக்கு மில்லையென்பதாம். ஆனால், சிற்சில சாஸ்திரங்களில் சிறிது தோடமென்று சொல்கின்றதாகினும் அதனை இந் நூலாசிரியர் ஒப்பவில்லை எ-று. (6)

ஏறு மிரண்டுபனி ரண்டா மிடத்ததிபன்
கூறுஞ் சுபருடனே கூடி நிற்கில்—வீறு நல்லன்
பாவியுட னேகூடிப் பாவித்தா னத்திருந்து
மேவியிடிற் பாவனாம் விள்.

(இ-ள்) ஒரு ஜாதகன் ஜென்ம லக்கினத்திற்கு முன் பின்னாகிய இரண்டாமிடம், பன்னிரண்டாமிடத்திற்குச் சொந்தமானவர்கள் பாவக்கிரகங்களாகினும் சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், அல்லது சுபக்கிரகங்களின் வீட்டிலிருந்தாலும் அஃதன்றிச் சுபக்கிரகங்களாற் பார்க்கப்பெற்றாலுஞ் சாதகனுக்குப் பாதகமில்லாப் பெருமையும் மேன்மையுந் தரக்கூடிய சுபர்களாவார்கள். அன்றியும் முற்கூறிய ஸ்தானாதிபர்கள் சுபக்கிரகங்களாயிருந்து பாபக்கிரகங்களுடன் கூடினாலும் அல்லது மேற்படி பாபக்கிரகங்களாற் பார்க்கப்பெற்றாலும் அதுவன்றி, பாபர்கள் வீட்டிலிருந்தாலும் அவர்கள் துற்பலனைத் தரத்தக்க பாபர்களாமெனச் சொல்வாயாக எ-று. (7)

இலக்கினத்துக் காமிரண்டேழ் மாரகமா மென்றும்
அலைக்குமிரண் டான்கொல்லா னல்லா—விலக்கினத்திற்
றோன்றுமந்தப் பாவிகணான் காமவருட் சொல்லுகின்ற
மூன்றெட்டார் மாரகரா மூட்டு.

(இ-ள்) ஒரு ஜாதகனின் ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடம், ஏழாமிடத்திற்குடையவர்கள், அச்சாதகனுக்கு

மாரகாதிபதிகளென்று சொல்வார்கள். ஆகினும், இரண்டாமிடத்திற்குடையவன் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பானன்றிக் கொல்லமாட்டான். பின்பெவர்கள் கொல்வார்களென்றால்? இலக்கினத்திற்கு, மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடம், இந்நான்கிடத்திற்குடையவர்களில் மூன்றாமிடத்திற்கும், எட்டாமிடத்திற்குடையவர்களும் இந் நூலாசிரியர் முற்கூறிய இரண்டாமிடம், ஏழாமிடத்திற்குடையவர்களில், இரண்டாமிடத்திற்குடையவன் கொல்லமாட்டானென்று சொல்லிவிட்டு, ஏழாமிடத்திற்குடையவனைப்பற்றிச் சொல்லாது விட்டதால், அவ்வேழாமிடத்திற்குடையவனுங் கொல்வார்கள் எ-று. (8)

குறிப்பு: மூன்றாமிடம், ஏழாமிடம், எட்டாமிடத்திற்குடைய மூவர்களும் மாரகஞ்செய்வதில் வல்லமையுடையவர்களென்பதாம்.

மாரகத்தா னத்தினிலே வந்தோர்சம் பந்தமுள
பேருந்தான் மாரகராம் பேசியிடிற்—சீரரசர்
யோகம் பிறந்தவருக் கோழூருப் புத்திதிசை
யாகவரும் யோகங்க ளாம்.

(இ-ள்) ஒரு ஜாதகனுக்கு மாரகத்தைச் சொல்ல வேண்டுமானால் முற்கவியிற் கூறியுள்ள மாரகத்தானங்களாகிய மூன்றாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம் இம்மூன்றிடங்களில் இருந்தவர்களும், அவர்களுடன் கூடியவர்களும் அல்லது அவர்களாற் பார்க்கப்பெற்றவர்களும் மாரகத்தைக் கொடுப்பார்கள். அன்றியும் இராசயோகத்தையுடைய சாதகனுக்கு நடக்கும், மாரகத்திசை முழுவதும், யோகத்தைக் கொடுக்காவிட்டாலும் அத்திசையில் வரும் யோகாதிபதிகளின் புத்திசித்திரங்களில் அம்முழுத்திசையிற் கொடுக்கக்கூடிய இராசயோகப் பலன்களை முற்றிலுந் தருவார்கள் எ-று. (9)

மாரகத்தோ டத்தினுக்கு வன்குருவுஞ் சுக்கிரனும்
மாரகனே யானால் வலுதோடம்—பாரவரை
விட்டாற் புதனிந் திரவிசனி மேற்செவ்வாய்
கட்டாம் பெலநிறையாய் காண்.

(இ-ள்) மாந்தருக்கு மரணத்தைக் கொடுக்கின்ற ஸ்தானாதிபத்தியம், வியாழனுக்கும் சுக்கிரனுக்கும் கிடைத்திருக்குமானால் அவர்கள் தவறாமற் கொல்லக்கூடிய சத்திவாய்ந்தவர்களென்றும், அவ்விருவர்களைப் பார்க்கிலும் புதனானவன் பலங்குறைந்தவனென்றும் புதனைப்பார்க்கிலும், சந்திரனானவன் பலங்குறைந்தவனென்றும், சந்திரனைப் பார்க்கிலும், சூரியனானவன் பலங்குறைந்தவனென்றும், சூரியனைப்பார்க்கிலும், சனியானவன் பலங்குறைந்தவனென்றுங் கண்டுகொள்வாய் எ-று. (10)

உற்ற விராகவனு மோர்மார கத்தானம்
பற்றியிருந் திட்டாலும் பார்த்தாலும்—வெற்றியுற
மாரகர்க டம்முடனே கூடிடினு மாரகர்போ
லார வதைத்திடுவ ரன்று.

(இ-ள்) மாரகஸ்தானங்களாகிய மூன்றாமிடம், ஏழாமிடம், எட்டாமிடமாகிய ஸ்தானங்களில், இராகாவது அல்லது கேதாவது ஒருவரிருந்தாலும், அஃதின்றி அவ்வீட்டுக்குடையவர்களுடன் கூடியிருந்தாலும் அவ்வாறின்றி அந்த

ஸ்தானதிபதிகளை இராகு கேதுக்கள் பார்த்தாலும் இல்லாமல் இராகு கேதுக்களை அவ்வீட்டுக் குடையவர்கள் பார்த்தாலும் அவர்களுக்குரிய திசாபுத்தி சித்திரகாலங்களில் தப்பாமல் மாரகத்தைச் செய்வார்கள் எ-று. (11)

பன்னொன்று மூன்றாறெட் டாதி பதியமிசை
தன்னுடைய சம்பந்தஞ் சார்ந்தவரும்—வன்பாவர்
சம்பந்தர் கூடுவதும் பார்க்கிறதுந் தானதுவா
மிம்மருமங் கண்டே யியம்பு.

(இ-ள்) இயற்கையில் பாவிகளென்று சொல்லப்பெற்ற மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடத்திற் குடையவர்களுடன் சேர்ந்திருந்தவர்களும் அல்லது அத்தானத்திற்குடையவர்களால் பார்க்கப்பெற்றிருந்தவர்களும், சுபர்களாயினுங் கொடிய பாபர்களாம். அன்றியும், இவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்வதும், ஒன்றுமென்று அறிந்துகொள்வாய் எ-று. (12)

கிரகங்களின் பார்வைகளாவன: சூரியனுக்கு 3-6-7-10-மிடமும், சந்திரனுக்கு 5-7-8-மிடமும், செவ்வாய்க்கு 4-7-8-11-மிடமும், புதனுக்கு 5-7-மிடமும், வியாழனுக்கு 5-7-9-10-மிடமும், சுக்கிரனுக்கு 6-7-8-மிடமும். 9-மிடம் சூட்சப் பார்வை யென்றும், சனிக்கு 3-7-11-மிடமும், இராகுக்கு 3-7-11-மிடமும், கேதுவுக்கு 3-4-7-11-மிடமும் பார்வையாம்.

பெலகேந் திரகோண நாதருக்குப் பேதஞ்
சொலுபாவி சம்பந்த தோட—மிலைமயிலே
அன்னியகண் டங்கோணத் தாதிபருக் குண்டதனை
இன்னதெனப் பார்த்தறிவா யே.

(இ-ள்) மேற்சொல்லிய ஸ்தானங்களுக் கதிபர்களுடன் சம்பந்தப்பட்ட தோடமானது கேந்திர, திரிகோண ஸ்தானங்களில் உயர்வாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடங்களுக் குடைய கிரகங்களுக்கில்லையென்றும், மற்ற ஒன்று நான்கு ஐந்து ஏழாமிடத்திற்குடைய கிரகங்களுக்கு மேற்கண்ட தோடங்களுண்டாமென்று மயிலைப்போன்ற சாயலையுடைய பெண்ணே, நீ தெரிந்துகொள்வாய் எ-று. (13)

கேந்திரஸ்தானங்களாவது 1-4-7-10-மிடமும் திரிகோணஸ்தானங்களென்பது 5-9-மிடமுமாம்.

சாடுதிரி கோணத் ததிபதிக டம்முடனே
நாடுகண் டத்ததிபர் நற்கோளாய்—கூடியிடின்
மெத்தப் பலன்றருவர் மேலவர்க டன்றிசையில்
வெற்றியோ கங்கொடுப்பார் விள்.

(இ-ள்) ஒன்றாமிடம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடத்திற்குடையவர்களில் மேற்சொல்லிய கேந்திராதிபத்திய தோடத்தை யடையாதவர்களும் திரிகோணதிபதிகளாகிய, அஞ்சாமிடம், ஒன்பதாமிடத்துக்குடையவர்களும் ஒரு விராசியிற் சேர்ந்திருப்பார்களாகில் அவர்கள், அச்சாதகனுக்குக் குற்றமற்ற சுகபலன்களைக் கொடுப்பதுடன், அவரவர்கள் திசாபுத்திகளில் அதிக மேன்மையாகிய யோகங்களையுந் தருவார்கள் எ-று. (14)

கேந்திரத்திற்பத்தாங்கிளர்திரிகோணத்தொன்பான்
ஆந்தபெல மாந்தான மந்ததிபர்—சேர்ந்திருக்கப்
பார்க்கவொரு வற்கொருவர் பார்யோகக் காரகரா
மார்க்கும் அரிதாம் அறி.

(இ-ள்) மேற்கூறிய கேந்திரஸ்தானங்களாகிய நான்கிடங்களிலும் அதிக சிலாக்கியத்தோடுங்கூடிய பத்தாமிடத்திற்குடையவனும் திரிகோண ஸ்தானத்திலுயர்வாகிய ஒன்பதாமிடத்திற்குடையவனுந் தன்ம கன்மாதி பதிகளாகையால், இவர்களிருவருங் கூடியிருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் அச்சாதகனுக்கு அரசர்களுக்கொப்பாகிய மிக்க மேன்மையாகிய யோகபலன்களைக் கொடுப்பார்கள். இவ்விதம் இரண்டு கிரகங்களுஞ் சேர்ந்திருந்தால் அவர்கள் கொடுக்கக்கூடிய பலன்கள், அருமையினும் அருமையென்று அறிவாயாக எ-று. (15)

ஒன்பதுபத் துக்குடையா ரெட்டுப்பன் னென்றதிப
ரென்னில்யோ கங்களிலை யென்றிடினும்—பின்புதிரி
கோணேசர் சம்பந்தங்கூடி லும்யோகங்களுண்டாம்
ஆணேறு யோகமுடை யார்க்கு.

(இ-ள்) ஒன்பதாமிடம், பத்தாமிடத்துக்குடையவர்கள், எட்டாமிடம், பதினேருமிடத்திற் குடையவர்களாய் இருப்பார்களானல் அவர்கள், அவ்வளவு சிலாக்கியமாகிய யோகத்தைக் கொடுக்கமாட்டார்களென்று சொன்னபோதிலுங்கூட அவர்களுடன் திரிகோணுதிபதியாகிய ஐந்தாமிடத்திற் கதிபதியானவன் கூடியிருந்தால், ஆண்சிம்மத்தையொத்த அச்சாதகனுக்கு இராச யோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (16)

ஒன்பதுபத் தல்லா துறுதிரிகோ ணங்கண்டம்
அன்னியயோ கப்பெயரா மவ்வதிபர்—அன்பாக
ஒன்றுக்கொன் றுய்மருவிச் சம்பந்த முண்டாகில்
நன்றரசர் யோகமதாம் நம்பு.

(இ-ள்) மேற்கூறிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்தைத் தவிற மற்ற கேந்திரதிரிகோண ஸ்தானங்களாகிய, ஒன்ருமிடம், நான்காமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடத்திற்குடையவர்கள் அவ்வளவு சிறந்த யோகங்களைக் கொடுக்கக்கூடியவர்கள் அல்லவென்ருலும் அத்தாணுதிபர்கள் மூன்ருமிடம், ஆருமிடம், எட்டாமிடம், பதினேருமிடங்களுக் குடையவர்களுடன் கூடாமலும், அன்னவர்களாற் பார்க்கப்படாமலும் கேந்திராதிபத்தியதோடத்தை யடையாமலும் ஒருவர்க்கொருவர் சேர்ந்திருப்பார்களாகில் சந்தேகமின்றி இராசயோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (17)

விண்டபத்துக் காதிபற்குவிள்கோணத்தாரொருவர்
தண்டியிடுஞ் சம்பந்தந் தானிருக்கில்—வண்டமிழோர்
சொன்னபத்துக் காதிபதி சொல்யோகக் காரகனும்
மன்னரிகந் தான்கொடுப்பான் வந்து.

(இ-ள்) உன்னதஸ்தானமென்று சொல்லும்படியான, பத்தாமிடத்துக் குடையவனுடன் திரிகோணஸ்தாணுதிபதிகளாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திற்குடையவர்கள் சேர்ந்திருக்கில் மேற்கண்ட பத்தாமிடத்திற்குடையவன் இராசயோகத்திலுஞ் சிறந்த யோகத்தையுங் கொடுக்கக்கூடிய வல்லவனுகி அன்னவன் திசாபுத்திவருங் காலங்களில் மட்டற்ற யோகங்களைக் கொடுப்பான் எ-று. (18)

கேந்திரகோ ணங்களதிற் கேடில்லாக் கோள்கூடி
யார்ந்திருக்கி லன்னியகோ ணத்ததிபர்—போந்தமலர்க்
கண்ணுலே பார்த்திடினுங் கூடக் கலந்திடினும்
நண்ணுமன்னர் யோகநல்கு நாடு.

(இ-ள்) கேந்திரஸ்தானங்களாகிய ஒன்றாமிடம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடத்திலும், திரிகோண ஸ்தானங்களாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திலும், மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினொராமிடத்திற் குடையவர்களாயில்லாமலும், அத்தாணதிபதிகளுடன் கூடாமலும், அன்னவர்களாற் பார்க்கப்படாமலும், முற்கவிகளிற் சொல்லிய கேந்திராதிபத்திய தோஷத்தை யடையாமலும் இருக்கின்ற கேந்திர திரிகோணாதிபதிகள், மேற்படி ஸ்தானங்களில் ஒருவருடனொருவர் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும், இயற்கையாகிய நடப்பிற் சுபபலன்களையும் அவர்கள் திசாபுத்தி காலங்களில் இராசயோகப்பலன்களையுங் கொடுப்பார்கள் எ-று. (19)

பத்துக் கதிபதியும் பாக்கியத்தி லேயிருக்க
வைத்ததன்ம னீரைந்தில் வந்திருக்கச்—சத்தோ
டவரவர்கள் வீட்டி லமர்ந்திருக்க யோகம்
உவகையுற வேவருமா மோது.

(இ-ள்) மேற்சொல்லியவாறு குற்றமற்ற கேந்திராதிபதியாகிய பத்தாமிடத்திற்குடையவன், ஒன்பதாமிடத்திலும்; திரிகோணாதிபதியாகிய, ஒன்பதாமிடத்திற்குடையவன் மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம் பதினொராமிடத்திற்குடையவர்களுடன் கூடாமலும், அன்னவர்களாற் பார்க்கப்படாமற் பத்தாமிடத்திலிருந்தாலும் அல்லது பத்தாமிடத்திற்குடையவன் பத்தாமிடத்திலும் ஒன்பதாமிடத்திற்குடையவன் ஒன்பதாமிடத்திலிருந்தாலும் அச்சாதகனுக்கு அவர்களின் இச்சைப்படி புவிமெச்சும் இராசயோகங்களைக் கொடுப்பார்கள். எ-று. (20)

நன்கேது ராகுவுந்தா னற்கோளைக் கூடுகினும்
பன்சுபர்கள் நோக்குத்தான் பட்டாலு—மன்புடைய
நற்றானம் புக்கிடினும் நல்லபல னேகொடுப்பர்
சொற்றியகோ டங்களுக்குச் சொல்.

(இ-ள்) கேந்திராதிபத்திய தோஷம் பெறாத கேந்திராதிபதிகளுடனும், மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினொரு மிடங்களுக்குடையவர்களுடனுஞ் சேராமலும், அன்னவர்களாற் பார்க்கப்படாமலுமிருக்கின்ற திரிகோணாதிபதிகளுடனும் இராகாவது அல்லது கேதாவது சேர்ந்திருப்பார்களாகில் அவர்கள் மிகுந்த இராசயோகப்பலன்களைக் கொடுப்பார்கள். எ-று. (21)

கெடிராகு கேதுந் திரிகோண கேந்திரத்தின்
குடிநாத நற்கோளைக் கூடித்—திடனாகக்
கேந்திரத்தி னிற்சுபர்கள் நோக்கக் கிளர்யோகஞ்
சேர்ந்திருக்கச் செய்வார் தினம்.

(இ-ள்) மேற்சொல்லியவாறு குற்றமற்ற கேந்திர திரிகோணாதிபதிகளுடன் இராகாவது, கேதாவது கூடிக் கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருந்தாலும் அல்லது கேந்திரகோணாதிபர்களாற் பார்க்கப்பெற்றிருந்தாலும் மேற்படி இராகு கேதுக்கள் சதாயோகத்தையும் அவர்கள் திசாபுத்தி காலங்களில் இராசயோகத்தையுங் கொடுப்பார்கள் எ-று. (22)

செல்திரிகோ ணாதிபருஞ்சேர்ந்தகண்டத்தாதிபருங்
கொல்கேது ராகி னுடன்கூடில்—வல்பிலமாய்க்
கூடினவ ரும்பாம்புங் கொள்யோகக் காரகராம்
நாடியிதைச் சொல்வாய் நயந்து.

(இ-ள்) முன்னஞ் சொல்லியபடி பாவதோடம் நீங்கிய கேந்திரதிரிகோணாதிபர்களுடன் கொடிய மாரகத் தன்மையைச் செய்கின்ற இராகாவது அல்லது கேதாவது கூடியிருக்கில் அவர்களும் மேற்படி இராகு கேதுக்களும் மிதமிஞ்சிய யோகங்களை அச் சாதகனுக்கு மிகவும் உபசாரத்துடன் கொடுப்பார்கள் எ-று. (23)

மீறுமிரு பாம்பிருந்த வீட்டுக் கதிபதிதான்
ஏறுமிரா சிக்குடையோ னேராகி—வீறாய்
கலந்தகோ ளின்பயனைக் கண்டளிப்பார் காரக்
குலவரவு தாமவராங் கூறு.

(இ-ள்) சொல்லற்கரிய வல்லமையுடைய இராகு கேதுக்குச் சொந்த வீடில்லாததால் இன்னவர்கள் இருக்கின்ற வீட்டுக்குடையவன் எந்த வீட்டில் எக்கிரகத்தோடு சுபமாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றானோ, அக்கிரகங்களுக்குள் வலிமைபெற்றிருக்கின்ற கிரகத்திற்கேற்பட்ட பலபாகத்தையும் அவ்வாறின்றி இராகு கேதுக்கள் இருக்கின்ற வீட்டுக்குடையவன் எந்த வீட்டில் போயிருக்கின்றானோ அந்த வீட்டுக்குடையவன் எந்த வீட்டில் எக்கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றானோ அக்கிரகங்களில் பலம் பொருந்தியவர்கள் தரத்தக்க பலன்கள் எதுவோ? அப்பலன்களை மேற்படி இராகு கேதுக்கள் கொடுப்பார்கள் எ-று. (24)

கிரகங்களில் ஒருவர்க்கொருவர் அதிக வலிவுடையவர்களை அறியும்படி. புதனைப்பார்க்கிலும் செவ்வாய் வலியன். செவ்வாயைப்பார்க்கிலும் சனி வலியன். சனியைப்பார்க்கிலும் வியாழன் வலியன். வியாழனைப்பார்க்கிலும் சுக்கிரன் வலியன்.

சுக்கிரனைப்பார்க்கிலும் சந்திரன்வலியன். சந்திரனைப்பார்க்கிலும் சூரியன் வலியன். சூரியனைப்பார்க்கிலும் இராகு வலியன். இராகைப்பார்க்கிலும் கேது வலியனும்.

கூறு மரவுடனே யெத்தனைகோள் கூடிடினும்
மீறுபல வான்பலனை விண்டளிப்பார்-வேறுமற்றப்
பேர்பலனைத் தாரார்கள் பேதைநீ யாராய்ந்து
பாரிதனைச் சொல்வாய் பகுத்து.

(இ-ள்) பேதமையென்பதை யாபரணமாகப் பூண்ட பெண்பாவாய்! நீ, உண்மையைத்தெரிந்து சொல்லவேண்டியதென்னவென்றால்? இராகுடனேயாவது கேதுடனேயாவது எத்தனை கிரகங்கள் சேர்ந்திருக்கின்றார்களோ அவர்களில் பெலமுள்ளவர்களுக்குரிய பலபாகங்களைக் கொடுப்பார்களன்றி மற்ற பலவீனமாகிய கிரகங்களுக்கேற்பட்ட பலன்களைக் கொடுக்கமாட்டார்கள் எ-று. (25)

கண்டத்திற் பாம்புமுதற் றீயோர் கலந்திருக்கிற்
றண்டக்கோ ணத்ததிபர் சம்மந்த-முண்டெனினுங்
கோணத் திருக்கக்கண் டத்ததிபர் சம்பந்தம்
பூணவும்யோ கங்களுண்டாம் பொற்பு.

(இ-ள்) கேந்திரஸ்தானமென்று சொல்லப்படுகிற ஒன்றாமிடம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடங்களில், இராகு கேதுக்கள் மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடங்களுக் குரிய பாவிகளுடன் சம்பந்தப்பட்டிருக்க அவர்களுடன் திரிகோணாதிபதிகளாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடங்களுக் குரியவர்கள் சேர்ந்திருப்பார்களாகில்

அவர்கள் அச் சாதகனுக்கு மேன்மையாகிய சுபபலன்களைக் கொடுப்பார்கள். அன்றியும் இதற்குமாற்றமாக மேற்கண்ட திரிகோணதிபதிகளும் பாவிகளுங்கூட அவர்களுடன் கேந்திராதிபதிகளில் ஒருவர் சேர்ந்திருக்கில் அவர்களும் அழகு தங்கிய சுபயோகங்களைக் கொடுக்கக்கூடிய வல்லமையுடையவர்கள் ஆவார்கள் எ-று (26)

தாங்குகண்டங் கோணத் ததிபதிகள் சம்பந்தம்
நீங்கிமூன் ருறெட்டு நேர்பதிஞென்—ருங்கதிபர்
காரகசம் பந்தந்தான் சாரில்யோ கத்தினுக்குக்
காரகரா மென்றே கருது.

(இ-ள்) கேந்திரஸ்தானமாகிய ஒன்ருமிடம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடத்திலும் திரிகோணஸ்தானமாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திலும், உயர்வென்றுசொல்லக்கூடிய யோகஸ்தானமாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்தில் பாவஸ்தானமாகிய மூன்ருமிடம், ஆருமிடம், எட்டாமிடம், பதிஞேருமிடங்களுக்குடைய பாவாதிபதிகளிருப்பார்களாகில் அவர்களும் யோககாரகர்களாகி மேன்மை பொருந்திய யோகங்களைக் கொடுப்பார்கள். அன்றியும், மேற்சொல்லிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற்குடையவர்களாற் பார்க்கப்பெற்றிருந்தாலும் அதிக யோகங்களைக் கொடுக்கக்கூடிய வல்லமையுடயவர்களாவார்களென்று நினைத்துக் கொள்வாய் எ-று. (27)

நன்யோகக் காரகர்க ளன்றிமற்ருேர் நற்றிசையின்
மன்யோகமு முண்டாம் வந்திடினும்—பன்யோகக்
காரகரே யாகிற் கனபலனீ வார்மற்ருே
ரார நிறை யாக்கொடுப்ப ராய்ந்து.

(இ-ள்) யோகங்களைக்கொடுக்கவல்ல யோககாரர்களைத் தவிற மற்றஸ்தானங்களுக் குரியவர்களும் யோகங்களைக் கொடுப்பார்கள். ஆனல், யோககாரர்களைப்போல அவ்வளவு சிறந்த யோகங்களைக்கொடுக்காமல் நிறைநிறையாக அந்தந்த ஸ்தானங்களுக்குள்ளபடி ஏற்றமுந்தாழ்ச்சியுமான யோகங்களைக் கொடுப்பார்களெனத்தெரிந்து சொல்வாயாக எ-று (28)

இரவிமுத லொன்பதுகோ ளேற்குந் திசையிற்
சருவுமவர் புத்தியினிற் ருரார்—மருவுபலன்
வேறெருருவர் புத்தி யநுசரித்து விள்பலன்கள்
கூறுகூ ருய்க்கொடுப்பார் கூறு.

(இ-ள்) ஒவ்வொரு சாதகனுக்கும் சூரியன் றிசை முதன்மையாக ஒன்றின்பின்பொன்ருகத் தொடர்ந்து வரும் ஒன்பது கிரகங்களின் திசைகளில் தங்கள் தங்கள் சுயபுத்திகளில் தரவேண்டிய சுபபலனையோ அல்லது அசுபபலனையோகொடுக்கமாட்டார்கள். ஆனல் அடுத்தடுத்து வருகின்ற புத்திநாதர்களிருக்கின்றஸ்தானபெலத்தின் குணகுணங்களையனுசரித்து அவரவர்கள் புத்தி சித்திர காலங்களில் பிரித்துப்பிரித்து மேற்சொல்லிய சுப, அசுப, பலன்களைக்கொடுப்பார்களென்று சொல்வாயாக எ-று. (29)

ஏற்றதிசை யிற்பலன்க ளெப்போ தருள்வரெனி
லாற்ற லவர்க்குமூன் ருறெட்டுத்—தோற்றுபதி
ஞென்றுக் குடையரல்லா லொத்தசமா னக்கிரக
நன்றுபுத்தி யிற்கொடுப்பார் நன்கு.

(இ-ள்) ஒரு ஜாதகனுக்கு வரக்கூடிய சுபக்கிரகங்களின் றிசைகளில் எப்பொழுது சுபபலன்களைக் கொடுப்பார்களென்ருல்? பெலம்பொருந்திய இலக்கினத்திற்கு, மூன்ருமிடம்,

ஆறுமிடம், எட்டாமிடம், பதினொருமிடங்களுக்குடையவர்க ளல்லாமல் மேற்கவிகளிற் சொல்லியவாறு பாவ, தோடத்தை யடையாத மற்ற சுபக்கிரகங்களின், புத்தி சித்திர காலங் களில் மிகவும், மேன்மையாகிய நற்பலன்களைக் கொடுப்பார் கள் எ-று. (30)

ஏற்றதிசை நாதனுக்கு மேந்துபுத்தி நாதனுக்குந்
தோற்றமூன் றாறெட்டுத் தொல்பதினொன்—றூற்றதிபர்
சம்மந்த மில்லையெனிற் றாமிருவோ ரும்பலன்கள்
செம்ம னளிப்பார் சிறந்து.

(இ-ள்) தற்காலம் ஒரு ஜாதகனுக்கு நடக்கக்கூடிய, திசாநாதனும், புத்திநாதனும், ஜென்மலக்கினத்திற்கு மூன்றா மிடம், ஆறுமிடம், எட்டாமிடம், பதினொருமிடங்களுக் குடையவர்கள் சம்பந்தப்படாமலும் அல்லது அந்த ஸ்தா னங்களுக்குடையவர்களாகாமலும் இருப்பார்களாகில் மேற் சொல்லிய திசாபுத்திக் கதிபர்களாகிய, இருவரும் தக்கபலன் களை மிக்கச் சுசிகரமாகவுஞ் சிறப்பாகவுங் கொடுப்பார்கள் எ-று. (31)

கேந்திரத்துக் காதிபதி கேடகலும் தன்றிசையிற்
போந்ததிரி கோணேசர் புத்தியினிற்-சேர்ந்தபலன்
றந்திடுவர் கோணேசர் தன்றிசையில் கேந்த்ரேசர்
சொந்தபுத்தி யிற்கொடுப்பார் சொல்.

(இ-ள்) அன்றியும் ஒரு ஜாதகனுக்கு நடந்துகொண் டிருக்கும் கேந்திராதிபத்திய தோடமில்லாத கேந்திராதிபதி களின் திசைகளில் மேற்சொல்லிய பாவஸ்தானங்களுக்குடை யவர்களாகாமலும் அல்லது அத்தானாதிபதிகளுடன் சம்பந்

தப்படாமலும், இருக்கின்ற திரிகோணாதிபதிகளின் புத்தியி லும் திரிகோணாதிபதிகளின்றிசைகளில் தங்களுடன் சம்பந் தப்பட்ட கேந்திராதிபதிகளின் புத்தியிலும் அதிக யோக மாகிய சுபபலன்களைக் கொடுப்பார்களென்று சொல்வாயாக எ-று. (32)

சொல்லு மிருவோர்க்குந் தோடமுண்டாய் கேந்த்ரேசன்
புல்லியிடுஞ் சம்பந்தம் பொய்த்திடினும்—நல்லதுதான்
பூண்ட திசையதனிற் கேந்த்ரேசன் புத்தியினில்
நீண்ட சுபமளிப்பார் நின்று.

(இ-ள்) இன்னும் மேற்கவிகளிற் சொல்லிய பாவ தோடங்களையுடைய கேந்திரதிரிகோணாதிபதிகள் ஒருவருக் கொருவர் சம்பந்தப்படாமல் விலகியிருப்பார்களாகில் மிகவும் மேன்மையைக் கொடுக்கக்கூடியவர்கள் ஆவார்கள். இவர்க ளுக்குள் திரிகோணாதிபதிகளின் திசைகளில் கேந்திராதிபதி களின் புத்திகளில் என்றும் நிலைத்திருக்கும்படியான சுப பலன்களைக் கொடுப்பார்கள் எ-று. (33)

தாணுவெனு மாயோகக் காரர்கள் சம்மந்தந்
தோணுமூன் றாறெட்டுத் தொல்பதினொன்—றாணதிபர்
வன்றிசையில் வெற்றியுள மாயோகக் காரகராந்
தன்புசிப்பில் யோகந் தரும்.

(இ-ள்) வெற்றியைத் தரத்தக்க யோககாரர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற் குடையவர்களுடன் சம்பந் தப்பட்ட மூன்றாமிடம், ஆறுமிடம், எட்டாமிடம், பதினொரு மிடங்களுக் கதிபதிகளில் பலம் பெற்றவர்களுடைய திசை களில் மேற்சொல்லிய ஒன்பதாமிடம் பத்தாமிடங்களுக்

குடையவர்கள் புத்திகளில் சிலாக்கியமாகிய யோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (34)

தீயோர் திசையிலந்தத் தீயோர்சம் மந்தமிலா
மாயோக காரகர்தம் மன்புசிப்பிற்—றேயு
மவபலன்கண் மெத்தவுண்டா மானபலன் முரா
ருவமையிலா மின்னே யுரை.

(இ-ள்) ஒப்பற்ற லட்சணங்களோடுங் கூடியமாதரசே ஜாதகர்களுக்கு நீ, சொல்லக்கூடியதென்னவென்றால் கொடிய பாவிகளுடைய திசைகளில் மற்ற பாவிகளுடன் சம்பந்தப் படாத யோககாரகர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற் குடையவர்கள் புத்திகளில் நன்மையாகிய பலன்களொன்றும் நல்காமல் மிகவுந்தீமையாகிய பலன்களைக்கொடுப்பார்களென் பதாம் எ-று. (35)

பாவிதிசை யாயவர்கள் சம்பந்த மேபரவாத்
தேவசுபக் கோள்புசிப்பிற் றீதுபலன்—மேவியிடு
மன்னோர்சம் பந்தமுள நற்கோட்க டன்புசிப்பில்
உன்னி லிருவினையு முண்டு.

(இ-ள்) தற்காலம் ஒரு, ஜாதகனுக்கு நடக்கக்கூடிய பாவக்கிரகங்களின் திசைகளில் மற்ற பாவக்கிரகங்களுடன் சம்பந்தப்படாத தெய்வத்தன்மை பொருந்திய சுபக்கிரகங் களின் புத்திகளில் தீமையாகிய பலன்களையே கொடுப்பார்க ளன்றி சுபபலன்களைச் சிறிதேனுங் கொடுக்கமாட்டார்கள். அன்றியும் மேற்படி சுபக்கிரகங்களுடன் பாவக்கிரகங்கள் கூடியிருக்கில் அவர்கள் புத்திகளில் நினைத்துப்பார்க்கில்

(மிஸ்ரபலனென்ற) இன்பதுன்பங்களைச் சமமாகக்கலந்து கொடுப்பார்கள் எ-று. (36)

திசைநாதன் பாவருமாய் சேர்புத்தி நாத
னசையோக காரகராய் நண்ணி—னிசமாம்
இராசயோ கங்கணல்கி யேயரிட்டங் கூடத்
தராசு நிறை போலளிப்பார் சாற்று.

(இ-ள்) பாவக்கிரகங்களினுடைய திசைகளில் அவர் களுடன் சம்பந்தப்பட்ட யோககாரகராகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற் குடையவர்கள் புத்திகளில் தராசுநிறையைப் போலாக இராசயோகப் பலன்களையும் அரிட்டயோகங்க ளாகிய பீடைகளையும் சமமாகக் கொடுப்பார்கள் எ-று. (37)

சாற்றும் பவர்சுபங்க டந்தாற் சுபர்திசையிற்
போற்றுசுபர் புத்திவரிற் பொங்குசெல்வந்—தோற்றிவிடு
மென்பதற்குச் சந்தேக மில்லை யிளங்குயமேற்
பொன்புனையு மாதே புகல்.

(இள்) இளமைதங்கிய தனபாரங்களின்மேல் பொன் னாற் செய்யப்பெற்ற பூடணங்களைப் பூட்டியிருக்கின்ற பூவை யர்க்கரசே நீ, புகலக்கூடியதென்னவெனில் மேற்சொல்லிய பாவர்கள் சுபபலன்களைக் கொடுப்பார்களாகில் யாவராலும் போற்றப்படுகின்ற சுபக்கிரகங்களில் ஒருவர்திசையில் ஒவ்வொ ருவர் புத்திகளிலும் மங்களகரம்பொங்கும்படியான சுபபலன் களைக் கொடுப்பார்களென்பதாம் எ-று. (38)

சார்யோக காரகர்க டங்களுடச் சம்பந்த
மேர்பிலாக் கோளி னெதிற்றிசையி—லார்யோகக்
காரகர்கள் புத்தியினிற் காணும் பலன்கொடுப்பார்
மேலு மொருவிடத்தே விள்.

(இ-ள்) யோகாதிபதிகளாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற் குடையவர்களுடன் சம்பந்தப்படாத மற்ற சுபர்களுடைய திசாகாலங்களில் மேற்சொல்லிய யோகாதிபதிகளின் புத்திகளில் ஒரு சமயா சமயங்களில் அன்னவர்களிருக்கின்ற ஸ்தானங்களின் நேர்மைக்கிணங்கத் தகுந்த பலன்களைக் கொடுப்பார்கள் எ-று. (39)

மன்யோக காரகர்க ளாந்திசையில் வந்திடுமேற்
பன்புத்தி நாதனுக்குப் பாவமுறிற்—றன்றேட
மில்லையந்தப் பாவிபுத்தி யில்யோக மெத்தவுண்டாஞ்
சொல்லும்பின் யோகங்க டேண்டு.

(இ-ள்) இராசயோக காரகர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடங்களுக் குடையவர்களுடையதிசையில் பாவஸ்தானங்களிலிருந்தவர்களுடைய புத்தியும் பாவக்கிரகங்களுடைய புத்தியும் பாவக்கிரகங்களுடன் சம்பந்தப்பட்டவர்களுடைய புத்தியும் வருமாகில் அவர்களில் பாவாதிபத்திய தோடங்கள் நீங்கப்பெற்றவர்களும் யோகாதிபதிகளுக்குச் சமானமாக மிகவுஞ் சிறந்த யோகங்களைப் பிற்காலத்தில் மென்மேலுங் கொடுப்பார்கள் எ-று. (40)

தூண்டுமவர் சம்பந்தந் தோன்றுநற்கோ ளில்யோகம்
பூண்டளிப்பன் சம்பந்தம் பூணுமற்—றூண்டுங்கோள்
புத்தியுந்தான் முன்போற் பொருந்துஞ் சுபபலனை
மெத்தத் தருவார் விரைந்து.

(இ-ள்) மேற்சொல்லிய யோகாதிபதிகளுடன்சம்பந்தப்பட்டச் சுபக்கிரகங்களின் திசாபுத்தி சித்திரங்களிற் சுபயோகங்களைத் தாராளமாகக்கொடுப்பார்கள். அன்றியும் யோகாதிபதிகளுடன் சம்பந்தப்படாத மற்ற சுபங்கிரங்களின் திசாபுத்தி சித்திரங்களில் அதிமேன்மையாகிய யோகங்களை முதன்மையாகச் சீக்கிரத்திற் கொடுப்பார்கள் எ-று. (41)

விரைந்துவரு மாயோக காரகர்கள் வெற்றிப்
பொருந்துஞ்சம் பந்தமில்லாப் போது—மிருந்துவரு
மன்னியோ கங்களுட காரகர்க ளாம்புசிப்பில்
மன்னர்யோ கங்கள் வரும்.

(இ-ள்) அதிவேகமாக வருகின்ற யோகாதிபர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற்குடையவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களும், சம்பந்தப்படாதவர்களுமாகிய, கிரகங்களினுடைய திசைகளில் மற்ற பாவதோடங்களடையாமற் செயங்கொண்டிருக்கின்ற மற்ற யோகாதிபதிகளினுடைய புத்திசித்திரங்களில் மிகவும் உயர்வாகிய இராசயோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (42)

விண்கேது ராகுவுக்கு மேல்யோக காரகர்க
ளெண்மருவு சம்மந்த மில்லையெனிற்-றண்ணமுத
யோகவதி காரர்புத்தி யுற்றபொழு தேயோகம்
வாகு படக்கொடுப்பார் மாண்பு.

(இ-ள்) ஆகாயமாகிய இராசிமண்டலங்களிற் சஞ்சரிக்கின்ற இராகு கேது, இருவருக்கும் யோகாதிபதிகளுடைய சம்பந்தமில்லாவிட்டாலும் மேற்படி இராகு கேதுக்களுடைய திசைகளில் வரக்கூடிய அமுதத்திற் கொப்பாகிய யோகாதிபர்களின் புத்தி சித்திரங்களிற் பெருமையோடுங் கூடிய பிரபலமாகிய யோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (43)

ஆகாத யோகமுள காரகர்க ளாந்திசையில்
வாகாநல் யோகந்தான் வந்தெய்தும்—யோகம்
வருங்கால மானதுவு மாயோகக் காரர்
பெரும்புசிப்பி லுண்டெனவே பேசு.

(இ-ள்) ஒரு ஜாதகனுக்கு மாரகஸ்தானங்களுக்குச் சொந்தமாகிய கிரகங்களின் திசைகள் நடக்குங்காலத்தில் அதிமேன்மையைத் தரத்தக்க இராசயோகப் பலன்களும் வந்தெய்தும் ஆனால், அவ்வித யோகங்கள் எக்காலத்தில் வருமென்னில் அத்திசாநாதனுக்கு ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற்குடையவர்களின் புத்தி, சித்திரங்களிலும் அல்லது இலக்கினத்திற்கு ஒன்பதாமிடம், பத்தாமிடங்களுக்குடையவர்களின் புத்தி, சித்திரங்களிலும் அடைவார்களென்று சொல்வாயாக எ-று. (44)

சீரரசர் யோகமது சேர்ந்துவருங் காலங்கண்
மாரகர்க டன்றிசையில் வந்தெய்தும்—பாரதனுள்
பாவபுத்தி யின்மிகுதி பாக்கியமுங் கீர்த்திகளு
மேவுமற்ற புத்திசமன் மெய்.

(இ-ள்) சீர்பொருந்திய . இராசாங்கயோகங்களானது இப்பூமியிற் பிறந்த ஒரு ஜாதகனுக் கேற்படக்கூடிய மாரகத் திசைகளில் வந்து சேரும். ஆகினும், அத்திசைகளில் பாவிகளும், பாவஸ்தானங்களுக் குரியவர்களுடைய புத்தி, சித்திரங்களில் மிகுந்த பாக்கியங்களும், கீர்த்திகளும், உண்டாகும்படியான யோகங்களைக் கொடுப்பார்கள். அன்றியும், மேற் சொன்னவர்களைத் தவிர மற்றவர்களின் புத்தி சித்திரங்களில் சமரசமாகிய யோகங்களை யுண்மையாகக் கொடுப்பார்களென்று சொல்வாயாக எ-று. (45)

மாரகர்க டம்முடைய சம்பந்த மார்க்கமுள
சார சுபர்புசிப்பிற் றுன்கொல்வார்—நேருடைய
சம்பந்த மில்லாத்தீ யோர்புசிப்பிற் றுன்கொல்வர்
அம்மவிது கண்டே யறி.

(இ-ள்) ஒரு சாதகனுக்கு மாரகத்தைச் செய்யக்கூடிய வல்லமையுடைய கிரகங்களுக்குரிய திசைகளில் மேற்படி கிரகங்களுடன் சம்பந்தம்பெற்ற பாவங்கள் நீங்கியமற்ற சுபர்கள் சம்பந்தப்பட்டிருந்தால், அன்னவர்கள் புத்திசித்திரங்களிற் கொல்லமாட்டார்கள். ஆனால் மேற்சொன்ன நேர்மையுடைய கிரகங்களுடன் கூடாமல் வெவ்வேறு ஸ்தானங்களில் தங்கியிருக்கின்ற தீய, பாவிகளுடையபுத்தி, சித்திரங்களில் கொல்வார்களென்று கண்டறிந்து சொல்வாயாக எ-று. (46)

இன்னவகை யெல்லா மிசையு மிலக்கினங்கள்
பன்னிரண்டி னுள்ளும் பரவியே—மன்னியிடு
மாரகரைப் பாவிகளை மாயோக காரகரைச்
சேரவெல்லாஞ் சொல்வேன் றெரிந்து.

(இ-ள்) மேற்சொல்லிவந்த வகைகளெல்லாம் மிகவுந் தெளிவாக ஒவ்வொருவருந் தெரிந்துகொள்ளும் பொருட்டு, இராசிமண்டலத்தில் அடங்கிய பன்னிரண்டு இலக்கினங்களில், இன்னவிலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு இயற்கையோடுங்கூடிய யோககாரகர்கள், இன்னின்னவர்களென்பதும் பாவர்கள், இன்னின்னவர்களென்பதும் சுபர்கள், இன்னின்னவர்களென்பதும் மாரகஞ், செய்யக்கூடியவர்கள் இன்னின்னவர்களென்பதும் இன்னும் மற்ற விபரங்களையும் சொல்லுகிறேன் எ-று. (47)

மேடலக்கினம்.

மென்மேட லக்கினத்தை மேவிப் பிறக்கிலிந்து
பன்புகர்மா லுஞ்சனியும் பாவிரவி—நன்குருசேய்
நீடுநல்லர் பாக்கியகர் மாதிகுரு நேர்சனியுங்
கூடியிடில் யோகமில்லை கூறு.

(இ-ள்) ஜீவகோடிகள் வசிக்கக்கூடிய மண்டல புருடனின் அங்கங்களாகிய இராசிமண்டலத்தில் ஆதியாகிய மேடராசியிற் பிறந்தவர்களுக்கு சந்திரன், சுக்கிரன், புதன், சனி, இந்நால்வர்களில், சந்திரனானவன் நான்காமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். சுக்கிரனானவன் இரண்டாமிடத்திற் குடையவனாயிருந்தாலும் ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். புதனானவன் மூன்றாமிடம், ஆறாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். சனியானவன் பத்தாமிடத்திற் குடையவனாயிருந்தாலும் பதினொராமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். துற்பலன்களைக் கொடுக்கவல்லபாவிகளாம். சூரியன், வியாழன், செவ்வாய், இம்மூவர்களில் சூரியனானவன் ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். வியாழனானவன், பனிரெண்டாமிடத்திற் குடையவனாயிருந்தாலும் திரிகோணஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். செவ்வாயானவன், எட்டாமிடத்திற்குடையவனாயிருந்தாலும் இலக்கினாதிபத்தியம் பெற்றிருப்பதால் அட்டமாதிபத்தியம் நீங்கி உயர்ந்த சுபபலன்களைக் கொடுக்கவல்ல சுபர்களாம். ஆனால் தன்மகன்மாதி பதிகளென்று சொல்லக்கூடிய ஒன்பதாமிடம், பத்தமிடங்களுக்குடைய, வியாழனும், சனியும். ஒருவரையொருவர்கூடி ஒரு ராசில் இருந்தாலும் அல்லது ஒருவரை

யொருவர் பார்த்துக் கொண்டாலும் அச்சாதனுக்கு இராச யோகத்தைக் கொடுக்கமாட்டார்கள் எ-று. (48)

கூறுமந்த னார்குருவும் பாவிவெள்ளி கொல்லான்பின்
வேறுசனி யும்புதனும் விண்டுகொல்வர்—தேறிப்
பகுத்தறிந்து பார்த்துப் பலாபலன்கள் கண்டே
தொகுத்துரைப்பா யெல்லாந் தொடர்ந்து.

(இ-ள்) மேற்சொன்னவிதமாக சனியும் வியாழனுங் கூடியிருக்கில் பாவியாகிய சனியுடன்கூடிய சுபனாகியவியாழனும் பாவியாம். சுக்கிரனானவன் ஏழாமிடத்தாதி பத்தியம் பெற்றிருந்தாலும் இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலுங் கொல்லமாட்டான். மற்றகிரகங்களில் சனியானவன் பாவஸ்தானமாகிய பதினொராமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். புதனானவன், மூன்றாமிடம், ஆறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். இவ்விருவர்களில் ஒருவர் மாரகத்தைச் செய்வார்கள். ஆதலால், நாம், நவக்கிரகங்கள் வீற்றிருக்கின்ற அந்தந்தஸ்தானங்களுக் குரியவர்களுக் கேற்பட்டுள்ள சுபாபம், பெலம், பெலவீனம், பட்சபெலம், சுபம், அசுபம், கேந்திர திரிகோணாதிபதிகளுடன், சம்பந்தபட்டவர்களுட பாவ தோடங்கள், முதலான விபரங்களையெல்லாம் ஆராய்ந்து தெரிந்ததின்பின்பு ஒவ்வொருவருக்கும் பலன் சொல்லவேண்டும் எ-று. (49)

இடபலக்கினம்.

தன்னிடப லக்கினத்தைச் சாரச் செனித்தவர்க்குப்
பன்னுமதி பொன்புகரும் பாவியா—மன்னிரவி
காரிபுத னல்லவர்கள் காண்சனியன் மாத்திரந்தான்
சாரரசர் யோகந் தரும்.

(இ-ள்) மங்கைபாகன் வாகனமாகிய இடபலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு சந்திரன், வியாழன், சுக்கிரன். இம்மூவர்களிற் சந்திரனானவன் மூன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். வியாழனானவன் எட்டாமிடம், பதினொறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். சுக்கிரனானவன் ஒன்றாமிடம், ஆறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். சூரியன், சனி, புதன் இம்மூவர்களில் சூரியனானவன், நாலாமிடத்தாதிபத்தியம்பெற்றதினாலும். சனியானவன் ஒன்பதாமிடம், பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். புதனானவன் இரண்டாமிடம், ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். சனியானவன் தன்மகன்ம ஸ்தானாதிபதியாகையால் அச்சனியானவன் மட்டும் இராசயோகத்தைக் கொடுப்பான் எ-று. (50)

தருகுருவுஞ் செவ்வாயுஞ் சார்ந்த மதியும்
வருமா ரகராக வாட்டி—வெருவியிடக்
கொன்றிடுவர் புந்திகொல்லான் கூறுதிசை தன்னிலுந்தா
னன்றறிவாய் சொன்னே னயந்து.

(இ-ள்) மேற்சொல்லிய இடபலக்கினத்திற் பிறந்தவர்களை வியாழன், செவ்வாய், சந்திரன், இம்மூவர்களின், திசாபுத்தி காலங்களில், பயங்கரமாகிய நோய்களைக்கொடுத்து மாரகத்தைச் செய்வார்கள். புதனானவன் இரண்டாமிடத்திற்குடையவனாதலால் மாரகத்தைச்செய்யமாட்டான். ஆதலால், இவ்விபரங்களை நன்குணர்ந்து சொல்லக்கடவாய் எ-று. (51)

மிதுன லக்கினம்.

சொல்மிதுன லக்கினத்திற்றோய்ந்துபிறந்திடமால்
புல்சேயும் பொன்னிரவி பொல்லாதார்—நல்லவெள்ளி
தானொருவன் நல்லன் சனிகுருவுங் கூடியிடில்
மேனரசர் யோகமில்லை மீது.

(இ-ள்) சாற்றுதற்கரிய மங்களகரம் பொருந்திய மிதுன லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு புதன், வியாழன், செவ்வாய், சூரியன், இந்நால்வர்களில், புதனானவன், ஒன்றாமிடம், நான்காமிடத் தாதிபத்தியம் பெற்றதினாலும். வியாழனானவன், ஏழாமிடம், பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். செவ்வாயானவன், ஆறாமிடம், பதினொறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். சூரியனானவன், மூன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். சுக்கிரனானவன், திரிகோண ஸ்தானமாகிய ஐந்தாமிடத்திற்கும், சயனசுகபோக ஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தாதிபத்தியமும் பெற்றவனாதினால் சுபனாம். அன்றியும், இச்சாதகர்களுக்கு, தன் மகன்மாதிபதிகளாகிய வியாழன், சனி இருவர்களிற் சனியானவன் எட்டாமிடம் ஒன்பதாமிடத்தாதி பத்தியம்பெற்ற மத்திமப்பாவனாகி, இயற்கையில் முழுப்பாவியாகிய வியாழனுடன் சம்மந்தப்பட்டாலும். அல்லது, ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும். புகழோடுங்கூடிய இராசயோகத்தைக் கொடுக்கமாட்டார்கள் எ-று. (52)

மீது மதிகொல்லான் மீண்டுசெவ்வா யாதித்தன்
வாதுகுரு மூவர்களு மாரகராய்—சேதமுறக்
கொல்லுவர்க ளென்றே குலவுகடற் சூழுலகி
லெல்லவருஞ் சொல்வா ரிசைந்து.

(இ-ள்) தரங்கமென்னும் அலைகள் ஒன்றுக்கொன்று தாண்டிக்குதிக்கின்ற சத்தத்தோடுங்கூடிய சமுத்திரத்தை யாடையாகத் தரித்திருக்கின்ற இப்பூமியினிடத்தில் சோதிட சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த நிபுணர்களெல்லாம் மேற்சொல்லிய மிதுனலக்கினத்திற் பிறந்தவர்களைச் சோமசேகரனென்

னும் ஈச்சுரனின் சடாமகுடத்திருக்கின்ற சந்திரனானவன் கொல்லமாட்டானென்றும். மற்றும், அக்குற்றத்தைச் செய்யக்கூடியவர்கள் ஆரென்னில், செவ்வாய், சூரியன், வியாழன் இம்மூவர்களிற் செவ்வாயானவன், ஆறுமிடம், பதினொருமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் வியாழனானவன் ஏழாமிடம், பத்தாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும் மாரகத்தைச் செய்வார்களென்று சொல்வார்கள் எ-று. (53)

குறிப்பு: இந், நூலாசிரியர் மாரகாதிபர்களைப் பற்றிச் சொல்லியிருப்பதற்கு மாறாக வேறுசில நூற்களில் ஆறுமிடம், பதினொருமிடத்தாதி பத்தியம் பெற்ற செவ்வாயானவன் கொல்லமாட்டானென்றும். ஆனால், ஆறுமிடத்தாதி பத்தியம் பெற்றவனாகையால் கண்டத்திற்குப்பதிலாகக் கடினமாகிய ரோகங்களைக் கொடுப்பானென்றும். அட்டமமென்னும் எட்டாமிடத்தாதிபத்தியம் பெற்ற சனியானவன் மிகுந்த பாக்கியங்களையுங் கொடுத்து விரயமாகச்செய்து பின்பு கொல்வானென்றுங் கூறுகின்றன.

கடகலக்கினம்.

கற்கடக லக்கினத்திற் காணச் சனித்தவர்க்குச்
சொற்புதனுஞ் சுக்கிரனுஞ் சொற்பாவி- நற்குருவுஞ்
செல்சேயும் நல்லவர்கள் சேய்குருவுங் கூடியிடில்
நல்யோகந் தந்திடுவர் நாடு.

(இ-ள்) நீரிலுலவும் நண்டினமாகிய கடகலக்கினத்திலுதித்தவர்களுக்கு யாவராலுஞ் சொல்லும்படியான கல்வி, கலவியில், வல்ல புதன், சுக்கிரன், இவ்விருவர்களில் புதனானவன் மூன்றாமிடம், பன்னிரண்டாமிடத்தாதி பத்தியம்பெற்ற

தினாலும் சுக்கிரனானவன், நான்காமிடம், பதினொருமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும், பாவிகளாம். வியாழன், செவ்வாய், இவ்விருவர்களில் வியாழனானவன், ஆறுமிடத்திற்குடையவனாயிருந்தாலும், ஒன்பதாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும் செவ்வாயனவன் ஐந்தாமிடம், பத்தாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். இவர்களிருவரும் ஒரு ராசியிற் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் இணையில்லாத இராசயோகத்தைக்கொடுப்பார்கள் எ-று. (54)

நாடிரவி கொல்லானே நன்மான்மை மாரகராய்
கூடி நின்று கொன்றிடுவர் கோபமதாய்—நீடுமவர்
தன்றிசையி லும்புத்தி தன்னி னுந்தான் றப்பாது
பொன்புனையு மாதே புகல்.

(இ-ள்) மின்னுக்கொப்பாகிய இரத்தினங்களை பொன்னிற் பொதிந்த ஆபரணங்களையணிந்த ஆரணங்கே, அச்சமின்றி, கற்கடகராசியிற் பிறந்தவர்களைச் சூரியனானவன் இரண்டாமிடத்தாதிபத்தியத்தையடைந்தவனாகையால் கொல்லமாட்டானென்றும். மற்றெவர்கள் மாரகத்தைச் செய்வார்களெனில்? நற்குணம் பொருந்திய புதன், சனி, இவ்விருவர்களில் புதனானவன், மூன்றாமிடம், பன்னிரண்டாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். சனியானவன், ஏழாமிடம், எட்டாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். சனிதிசையிற் புதன்புத்தியிலும் புதன்திசையிற் சனிபுத்தியிலும் ஒருவர்க்கொருவர் மாறுதலாக அதிககோபங்கொண்டு கொன்றிடுவார்களென்று சொல்வாயாக எ-று. (55)

குறிப்பு: இங், நூலாசிரியர் சந்திரனைப்பற்றி பாவியென்றும் சுபனென்றும் சொல்லாது விடுத்ததைப்பற்றி நாம், இலக்கின கேந்திராதிபதியானதாலும் அன்னவனுக்கு மற்றொரு இராசியில்லாதாலும் சமமாகிய பலன்களைத் தரக்கூடியவனென்று கருதவேண்டி இருக்கிறது.

சிம்மலக்கினம்.

சேர்ந்தசிம்ம லக்கினத்தைச் சேரச் செனித்தவருக்
கேந்துசனி மான்புகரு மேபாவி—போந்தசெவ்வா
யேறு மிரவிநல்ல னின்புகர்சேய் கூடியிடில்
வீறியயோ கங்களுண்டாம் வேறு.

(இ-ள்) பன்னிரண்டு ராசிகளிற் சேர்ந்திருக்கின்ற சிம்மலக்கினத்திற் பிறந்தவர்களுக்குத் தரக்கூடிய தீமைகளை ஏந்திக்கொண்டிருக்கின்ற சனி, புதன், சுக்கிரன், இம்மூவர்களிற் சனியானவன், ஆறுமிடம், ஏழாமிடத்தாதி பத்தியம் பெற்றதினாலும். புதனானவன் இரண்டாமிடத்துக் குடையவனாயிருந்தும் பதினொருமிடத்தாதிபத்தியம் பெற்றதனாலும். சுக்கிரனானவன் மூன்றுமிடம், பத்தாமிடத்தாதிபத்திம் பெற்றதினாலும் பாவிகளாம். இயற்கையிற் பாவிகளாகிய செவ்வாய், சூரியன், இவ்விருவர்களில் செவ்வாயானவன், நாலாமிடம், ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். சூரியனானவன் இலக்கினகேந்திராதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். இன்பசுகத்தைக்கொடுக்கக்கூடிய சுக்கிரன், செவ்வாய், இவ்விருவர்களும் ஒருராசியிற் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் பெருமையோடுங்கூடிய யோகங்களைப் பலவிதத்திலுந் தருவார்கள் எ-று. (56)

வேறுபுதன் கொல்லான் வினைபுகர்மை கொன்றிடுவர்
கூறுமற்ற பேர்கடான் கொல்லார்க—ளேறிற்
பகுத்தறிந்து பார்த்துப் பதறாமல் யார்க்கும்
வகுத்துரைப்பாய் மின்னே மதித்து.

(இ-ள்) மேற்கூறிய இலக்கினாதிபர்களை புதனானவன், இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றவனாகையாற் கொல்லமாட்டான் கெடுதிகளைச்செய்யக்கூடிய வல்லபம்பெற்ற சுக்கிரன், சனி, இவ்விருவர்களிற் சுக்கிரனானவன் மூன்றுமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சனியானவன் ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் மாரகத்தைச் செய்வார்களென்றும் மற்றவர்கள் மாரகத்தைச் செய்யமாட்டார்களென்றும் மின்னலைப்போன்ற இடையையுடைய பெண்ணே நீ, இவ்விதம் நவக்கிரகங்களின் பெலாபெலன் முதலானஸ்தானபெலன்களையும் பதறாமல் ஆராய்ந்துபார்த்து மேன்மைவந்து சேரும்படியாகச் சொல்வாயாக எ-று. (57)

கன்னியாலக்கினம்.

கன்னியா லக்கினத்திற் காணச் செனித்தவர்க்குப்
பன்னுகுரு சேய்மதிமால் பாவியாம்—மன்னுசனி
வெள்ளியுந்தான் நல்லவர்கள் விண்புகர்மா லுங்கூடிற்
றெள்ளரசர் யோகமுண்டாஞ் செப்பு.

(இ-ள்) எவருங்கண்டு இன்புறக்கருதுகின்ற கன்னியாலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு வியாழன், செவ்வாய், சந்திரன், புதன், இந்நால்வர்களில் வியாழனானவன், நாலாமிடம், ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் செவ்வாயானவன், மூன்றுமிடம், எட்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும்

புதனானவன், ஒன்றாமிடம், பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சந்திரனானவன், பதினொன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். சனி, சுக்கிரன், இவ்விருவர்களிற், சனியானவன், ஆறாமிடத்திற்குடைய ஆதிபத்தியமிருந்தாலும் ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். சுக்கிரனானவன், இரண்டாமிடம், ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். கிரகமண்டலத்துலவுகின்ற சுக்கிரன், புதன், இவ்விருவர்களில், புதனானவன், கேந்திராதிபத்திய தோஷத்தையடைந்திருந்தாலும் திரிகோணாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடியிருந்தாலும் அல்லது ஒருவர்க்கொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் அன்னவர்கள் மன்னவர்க்குரியயோகங்களைக் கொடுப்பார்களென்று சொல்வாயாக எ-று. (58)

செப்பு புகர்கொல்லான் சேர்செவ்வாய் சந்திரனு
மொப்பு குருவோ டென்மூவர்—தப்பாமற்
கொல்லுவர்கள் கண்டாய் குலவு மிதன்குறிப்பை
யொல்லையினிற் சொல்வா யுகந்து.

(இ-ள்) மேற்சொல்லிய கன்னியா லக்கினத்துதித்தவர்களைத் தப்பாமல் செவ்வாய், சந்திரன், வியாழன், இம்மூவர்களில், செவ்வாயானவன், மூன்றாமிடம், எட்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சந்திரனானவன், பதினொன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் வியாழனானவன், ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் மாரகத்தைச் செய்வார்களென்று சீக்கிரத்திற் சொல்வாயாக எ-று. (59)

துலாலக்கினம்.

துலையிற் பிறக்கமதி சூரியன்சேய் பொன்னுஞ்
சொலும்பாவி புந்திசனி சுங்கன்—நிலைசுபர்கள்
புந்திமதி யுங்கூடிற் போரரசர் யோகமுண்டாம்
வந்தசெவ்வாய் கொல்லான் வளைந்து.

(இ-ள்) தரணியில் வணிகர் கரத்திற்பிடிக்கும் நிறைக்கோலாகிய துலாராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன், செவ்வாய், வியாழன் இம்மூவர்களிற் சூரியனானவன், பதினொன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். செவ்வாயானவன் இரண்டாமிடம், ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். வியாழனானவன், மூன்றாமிடம்,ஆறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். புதன்,சனி,சுக்கிரன்,இம்மூவர்களில் புதனானவன், விரயஸ்தானமாகிய பனிரண்டாமிடத்திற்குடையவனாகவிருந்தாலும் திரிகோணஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுக்கிரனானவன், எட்டாமிடத்திற்குடையவனாயிருந்தாலும் இலக்கின கேந்திராதிபதிபத்தியம்பெற்றதினாலும் சனியானவன், நாலாமிடம், ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். தன்ம கன்மாதிபதிகளாகிய புதனுஞ், சந்திரனும், ஒரு ராசியிற் சேர்ந்திருந்தாலும் அல்லது, ஒருவர்க்கொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் அவர்களிருவரும் யுத்தத்தில் வெற்றிபொருந்தும்படியான இராசயோகங்களைக் கொடுப்பார்கள். செவ்வாயானவன் இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றவனையாற் கொல்லமாட்டான் எ-று. (60)

வளைந்தகுரு சூரியனும் வன்மா ரகராய்க்
களங்கமறக் கொல்லுவர்கள் கண்டாய்—விளங்கியிடுஞ்
சூதளவு மென்குயத்தாய் சோராம லிந்தவகை
போத வறிந்தே புகல்.

(இ-ள்) சூதாடுகின்ற வட்டையொத்து இளமையும் பெருமனுமாகிய தனபாரங்களையுமுடைய அறிவிற் சிறந்த ஆரணங்கே நீ, சோர்வடையாமல் மேற்கண்ட துலாலக்கினத்திற்பிறந்தவர்களை வியாழன், சூரியன், இவர்களிற் சூரியனானவன் பதினொருமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் வியாழனானவன் மூன்றாமிடம் ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் இவ்விருவர்களுடைய திசாபுத்திகாலங்களில்கொல்வார்களென்றுசொல்வாயாக எ-று. (61)

விருச்சிகலக்கினம்.

தேளிற் பிறந்தார்க்குச் சேய்புகர்மான் மைபாவி
நாளுமதி பொன்னிரவி நல்லவராம்—நீளிரவி
சந்திரனுங் கூடியிடிற் றூரரசர் யோகமுண்டாஞ்-
சொந்தகுரு தான்கொல்லான் சொல்.

(இ-ள்) நட்டணைசெய்யுந்துட்டர்களைக்கொட்டியவுடன் நடனமாடச்செய்யவல்ல விருச்சிகலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு செவ்வாய், சுக்கிரன், புதன், சனி, இந்நால்வர்களில், செவ்வாயானவன், இலக்கினாதிபதியாகி ஆறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுக்கிரனானவன், ஏழாமிடம், பன்னிரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் புதனானவன், எட்டாமிடம், பதினொருமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சனியானவன், மூன்றாமிடம், நாலாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். சந்திரன்,வியாழன், சூரியன், இம்மூவர்களிற் சந்திரனானவன், ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் வியாழனானவன், ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சூரியனானவன், பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். தன்மகன்மாதிபதிகளாகிய சந்

திரனுஞ் சூரியனும் ஒருராசியிற் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தாலும் வெற்றி மாலையைத் தரிக்கின்ற வேந்தர்களுக்குரிய இராசயோகங்களைக் கொடுப்பார்கள். வியாழனானவன், இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றவனாகையாற் கொல்லமாட்டான் எ-று. (62)

சொல்புதனு மந்தனுடன் சுக்கிரனு மாரகராய்
வல்விரைவிற் கொன்றிடுவர் வஞ்சகமாய்—நல்லணங்கே
யிந்தவர லாறு மிதனிலையு மேநினைந்து
புந்தியினுட் கொள்வாய் புகழ்ந்து.

(இ-ள்) மேற்சொல்லிய இலக்கினாதிபதிகளை புதன், சனி, சுக்கிரன், இம்மூவர்களில் புதனானவன் எட்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சனியானவன் மூன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுக்கிரனானவன் ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் வஞ்சகமுடைய மனத்தினராய் சீக்கிரத்திற் கொல்வார்களென்று பெண்கட்கரசாகிய பெண்மணியே நீ இந்த விபரங்களெல்லாஞ் சிந்தையில் ஆராய்ந்து அறிந்து சொல்வாயாக எ-று. (63)

தனுசிலக்கனம்.

தனுப்பிறக்க மான்மந்தன் றண்புகர்பொன் பாவி
நனிசெவ்வாய் சூரியன்று னல்லர்—சனிமதியுங்
கொல்லான் புகர்புதனுங் கொல்லுவர்மால் சூரியனும்
ஒல்லையினிற் கூடிலுண்டாம் யோகம்.

(இ-ள்) வீரவெண்டயந்தரித்த வேந்தர்கரத்தில் விருப்புற்றெடுக்குந் தனுசிலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு

சனி, புதன், சுக்கிரன், வியாழன், இந்நால்வர்களில் சனியானவன் இரண்டாமிடம் மூன்றுமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் புதனுனவன் ஏழாமிடம் பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் சுக்கிரனுனவன் ஆருமிடம் பதினெருமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் வியாழனுனவன் இலக்கினத்திற்கும் நாலாமிடத்திற்கும் உடையவனுதலாலும்பாவிகளாம். செவ்வாய், சூரியன், இவ்விருவர்களில் செவ்வாயானவன் பனிரண்டாமிடத்திற் குடையவனுயிருந்தாலும் திரிகோணஸ்தானமாகிய ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் சூரியனுனவன் ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் சுபர்களாம். எட்டாமிடத்திற்குடைய ஆதிபத்தியதோஷமானது நீங்கப்பெற்ற சந்திரனும் மூன்றுமிடத்தாதிபத்தியம் பெற்றிருந்தாலும் இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றவனுகிய சனியுங் கொல்லமாட்டார்கள். பின்பெவர்கள் மாரகஞ் செய்வார்களென்றால்? ஆருமிடம் பதினெருமிடத்தாதிபத்தியம் பெற்ற சுக்கிரனும் ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்ற புதனுங் கொல்வார்கள். சூரியனும், புதனும், தன்ம, கன்மாதிபதிகளாகையால் இவர்களிருவரும் ஒருராசியிற் கூடியிருந்தாலும் அல்லது ஒருவர்க் கொருவர் பார்த்துக் கொண்டாலும் இவர்கள் திசாபுத்தி ஏற்றுக் கொள்ளுங் காலங்களில் சீக்கிரமாக இராசயோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (64)

மகரலக்கினம்.

தூய்மகர லக்கினந்தான் றேன்றப் பிறந்தவருக்
கேய்குசனுஞ் சந்திரனு மேகுருவுந்—தீப்பாவி
வெள்ளிபுத னல்லர் விளங்கிரவி காரிகொல்லார்
விள்ளமதி யுங்குருவு மேல்.

(இ-ள்) அலைகளானது ஒன்றுடனென்று தாண்டிக் குதிக்கும் சத்தத்தையுடைய சமுத்திரத்தில் உலவுகின்ற பரிசுத்தமாகிய சுருவென்னும் மகரலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு செவ்வாய், சந்திரன், வியாழன், இம்மூவர்களிற் செவ்வாயானவன், நாலாமிடம், பதினெருமிடத் தாதிபத்தியம் பெற்றதினுலும் சந்திரனுனவன், ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும், வியாழனுனவன், மூன்றுமிடம் பன்னிரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் பாவிகளாம். சுக்கிரன், புதன், இவர்களிற் சுக்கிரனுனவன், ஐந்தாமிடம், பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் புதனுனவன், ஆருமிடத்திற்குடையவனுனுலும், ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் சுபர்களாம். சூரியன், சனி, இவ்விருவர்களில் சூரியனுனவன், அட்டமாதிபத்தியதோஷத்திற் கட்டுப்படாதவனுகையாலும் சனியானவன், இலக்கினத்திற்கும், இரண்டாமிடத்திற்குமுடையவனுனதாலுங் கொல்லமாட்டார்கள். இனி சந்திரன், வியாழனைப் பற்றிப் பிற்கவியிற் சொல்வோம் எ-று. (65)

மேலிருவருங் கொல்வர் வெள்ளிபுதன் கூடியிடிற்
கோல்யோக மெல்லாங் கொடுத்திடுவர்—நூல்வழியே
பார்த்துவர லாறறிந்து பார்மாரகரை யெல்லாஞ்
சேர்த்துரையு மின்னே தெளிந்து.

(இ-ள்) மேற்கவிற் கூறியுள்ள சந்திரன், வியாழன், இவ்விருவர்களிற் சந்திரனுனவன், ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் வியாழனுனவன், மூன்றுமிடம் பன்னிரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினுலும் மாரகத்தைச் செய்வார்கள். இச்சாதகர்களுக்குச்சுக்கிரனும், புதனும், ஒரு இராசி

யிற் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தாலும் பெருமைதங்கிய இராசயோகங்களைக் கொடுப்பார்களென்று பூரணச்சந்திரனை யொத்த முகாரவிந்தத்தையுடைய மாதரசே நீ, இவ்விபரங்களை யெல்லாம் மிகத்தெளிவாகச் சொல்லக்கூடிய சோதிடசாஸ்திரங்களை யெல்லாம் ஆராய்ந்து, யோகம், அவயோகம், மாரகம், முதலான சுபாசுபங்கள் வரக்கூடிய காலநிதானங்களை யறிந்து சொல்வாயாக எ-று. (66)

கும்பலக்கினம்.

கும்பவி லக்கினத்திற் கூடிப் பிறந்தவர்க்குப்
பம்புமதி பொன்சேயும் பாவிரவி—விம்புகழ்
மந்தசனி நல்லர் வலிபுகர்சேய் கூடியிடிற்
றந்தரசர் யோகந் தரும்.

(இ-ள்) சுபாசுபங்களில் நியமனஞ் செய்கின்ற கும்பலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு, சந்திரன், வியாழன், செவ்வாய், இம்மூவர்களிற் சந்திரனானவன் ஆறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும், வியாழனானவன், இரண்டாமிடத்திற்குடையவனா யிருந்தாலும், பதினொராமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும். செவ்வாயானவன் பத்தாமிடத்திற் குடையவனாயிருந்தாலும், மூன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். சுக்கிரன், சனி, இவ்விருவர்களில் சுக்கிரனானவன் கேந்திரஸ்தானமாகிய நாலாமிடத்திற் குடையவனாயிருந்தாலும், திரிகோணஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். சுக்கிரன், செவ்வாய், இவ்விருவர்களில் சுக்கிரனானவன் உயர்வாகிய ஒன்பதாமிடத்

தாதிபத்தியம் பெற்றதினாலும், செவ்வாயானவன் சிறப்பைத் தரக்கூடிய பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் இவர்கள் ஒருராசியிற் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் சாம, பேத, தான, தண்டமெனும் நான்குவிததந்திரங்களையுடைய அரசர்களுக்குரிய யோகங்களைக் கொடுப்பார்கள் எ-று. (67)

தருகுருவு மேகொல்லான் சந்திரனுஞ் சேயும்
வெருவி யிடக்கொல்வர் மிக்காய்—வருவிபரங்
கண்டு பெலனுகக் கருத்திலறிந் தேயுரையுங்
கண்டுமொழி நல்லாய் கசிந்து.

(இ-ள்) மேற்சொல்லிய கும்பலக்கினத்திற் பிறந்தவர்களை வியாழனானவன் இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றவனாகையாற் கொல்லமாட்டான். சந்திரன், செவ்வாய், இவ்விருவர்களில் சந்திரனானவன் மாரகத்தானமாகிய ஏழாமிடத்திற்கு விரயத்தானமென்கின்ற ஆறாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் செவ்வாயானவன் மூன்றாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் அதிக கோபங்கொண்டு மாரகத்தைச் செய்வார்களென்று கசிந்துருகுங் கற்கண்டுக்கொப்பாகிய மதுரச்சொற்களால் கிள்ளையைமருட்டிய பெண்பாவாய், நீ, இவ்விபரங்களை யெல்லாங் கருத்தில் ஆலோசித்துச் சொல்வாயாக எ-று. (68)

மீனலக்கினம்.

மீன விலக்கினந்தான் மேலாய்ப் பிறந்தவர்க்குச்
சூனசனி புந்திபுகர் சூரியன்பொன்—னூனமுடன்
பாவியாஞ் சேய்மதியும் பண்புடைய நல்லவர்கள்
கோவுகுரு செவ்வாயுங் கூடில்.

(இ-ள்) நீரில் உலாவுகின்றமீனலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு சனி, புதன், சுக்கிரன், சூரியன், வியாழன், இக்கிரகங்களிற் சனியானவன், பதினொருமிடம், பனிரெண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் புதனானவன், நாலாமிடம், ஏழாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுக்கிரனானவன், மூன்றாமிடம், எட்டாமிடத்தாதிபத்தியம் பெறறதினாலும்சூரியனானவன், ஆறாமிடத்தாதிபத்தியம்பெற்றதினாலும் வியாழனானவன், இலக்கினத்திற்குடையவனாய் பத்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் பாவிகளாம். செவ்வாய், சந்திரன், இவ்விருவர்களிற் செவ்வாயானவன், இரண்டாமிடம், ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சந்திரனானவன் ஐந்தாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாலும் சுபர்களாம். தன்மகன்மாதிபதிகள் ஒன்று சேர்ந்தால். எ-று. (69)

கூடி லிசாரிக்க யோகமுண்டாங் கொற்றமதை
நாடுசெவ்வாய் கொல்லான் நலிசனியோ—டுபுகர்
பானுபுதன் கொல்வார்கள் பைம்பாகி னோடளவுந்
தேனுமொழி மாதே தெரி.

(இ-ள்) மேற்கவியிற் சொல்லிய தன்ம கன்மாதிபதிகளாகிய செவ்வாயும், வியாழனும், சேர்ந்து ஒரு ராசியிலிருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் இவர்களிருவரும் இராசயோகப்பலன்களைக் கொடுப்பார்கள். செவ்வாயானவன் இரண்டாமிடத்தாதிபத்தியம் பெற்றதினாற் கொல்லமாட்டான் சனி, சுக்கிரன், சூரியன், புதன், இந்நால்வர்களும், மேற்கூறிய மாரகஸ்தானங்களுக்குரியவர்களாகையால் மாரகத்தைச் செய்வார்க ளென்று

பாகுடன் தேனைக்கலந்ததொத்த வசனங்களையுடைய பெண்ணே நீ, இதனைக்கண்டு தெளிவாயாக எ-று. (70)

ஆயுள்.

சொல்லிலக்கி னாதிபனுந் தோன்றுமட்ட மாதிபனும்
செல்லுசர ராசியுறிற் றீர்க்காயுள்—வெல்லுஞ்
சரந்திரங்கண் மத்திபமாஞ் சாருஞ் சரமும்
வருமுபய மும்மற்ப மாண்பு.

(இ-ள்) சகல பலன்களையுங் கண்டறிந்து சொல்லுதற்காதாரமாயிருக்கின்ற ஜென்மலக்கினத்திற் குடையவனும், ஆயுள் ஸ்தானமாகிய எட்டாமிடத்திற்குடையவனும், சரராசிகளாகிய மேடம், கடகம், துலாம், மகரம், இந்நான்கிராசிகளில் இருப்பார்களாகில் தீர்க்காயுளாம். சரராசியிலும், திரராசியிலு மிருப்பார்களாகில் மத்திமவாயுளாம். சரராசியிலும் உபயராசியிலு மிருப்பார்களாகில் அற்பாயுளாம் எ-று. (71)

மாண்பிலக்கி னாதிபதி மன்னுதிர ராசியுறி
லூணெட்டி னாத னுபயமுறிற்—காண்வயது
தீர்க்கந் திரஞ்சரங்கள் சேரிலது மத்திபமா
மார்க்குந் திரங்களற்ப மாம்.

(இ-ள்) பெருமை பொருந்திய இலக்கினாதிபனானவன் திரராசியாகிய இடபம், சிம்மம், விருட்சிகம், கும்பம், இந்நான்கிராசிகளில் ஒரு இராசியிலிருந்து எட்டாமிடத்திற்குடையவனானவன் உபயராசியாகிய மிதுனம், கன்னி, தனுசு, மீனம், இந்நான்கிராசிகளில், ஒரு இராசியிலிருப்பானாகில் தீர்க்காயுளாம். அன்றியும் மேற்கூறிய இலக்கின வட்டமாதிபதி

கள் திரராசியிலுஞ் சரராசியிலு மிருப்பார்களாகில் மத்திம வாயுளாம். இரண்டு ஸ்தானாதிபதிகளுந் திரராசிகளிலிருப்பார் களாகில் அற்பாயுளாம் எ-று. (72)

அற்ப மிலாதிலக்கி னாதிபதி யாமுபயம்
விற்பனவெட் டோன்றிரங்கள் வீற்றிருக்கி—லற்புதஞ்சேர்
மெத்த வயதுபய மேலுபய மத்தியற்ப
மொத்துபய முஞ்சரமு மோது.

(இ-ள்) பெருந்தன்மையுடன் கீர்த்தியையுந் தரத்தக்க இலக்கினாதிபதியானவன் உபயராசியிலும், எட்டாமிடத்திற் குடையவன் திரராசியிலு மிருப்பார்களாகில் தீர்க்காயுளாம். இருவர்களும் உபயராசியிலிருப்பார்களாகில் மத்திம வாயுளாம். சரராசியிலும் உபயராசியிலும் இருப்பார்களாகில், அற்பாயுளென்று சொல்வாயாக எ-று. (73)

ஓதுமிது வல்லா லுதய விலக்கினமு
மீதோரா லக்கினமு மேன்மையுள—சீதமதி
செல்லு மிலக்கினமுந் தேர்ந்தே வயதுகளை
மெல்லவே நிச்சயித்து விள்.

(இ-ள்) மேற்சொன்ன விதமாக இலக்கினத்திற்கும் எட்டாமிடத்திற்கும் உடையவர்களுக்குக்குப் பார்த்ததைப் போலாக இலக்கினமும், ஓராலக்கினமும், சென்மலக்கினமும், சந்திராலக்கினமுங்கொண்டு பார்த்து அதனாலேற்படக் கூடிய பூரணாயுசு, மத்திமாயுசு, அற்பாயுசு, என்பதனை விபரமாகத்தெரிந்து மனதில் நிச்சயஞ் செய்துகொண்டு சொல்வாயாக எ-று. (74)

குறிப்பு: சரராசிகளாகவும், திர உபய ராசிகளாகவும், வரில் தீர்க்காயுசு. திரசரராசிகளாகவும், உபயராசிகளாகவும், வரில் மத்திமாயுசு. உபயசரராசிகளாகவும், திரராசிகளாகவும், வரில் அற்பாயுசு. என்ற விபரங்களை மிகவுந்தெளிவாகத் தெரிந்து சொல்லவேண்டுமென்பதாம்.

ஒருகுளிகன் மேவு மிராசிதனக் கோசை
தருதிரிகோ ணத்திற் சனியன்—வருங்காலம்
வல்லபக லிற்பிறந்த பேர்கண் மடிந்திடுவர்
தொல்லையுல கோர்தமக்குச் சொல்.

(இ-ள்) ஒப்பற்ற சனியீச்சுரனின் மைந்தனாகிய குளிகனானவன் எந்தராசியிலிருக்கின்றானோ அந்தராசிக்குத் திரிகோணஸ்தானமாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திற் சனியானவன்வந்திருக்கின்றானோ, அக்காலத்தில் மாரகாதிபத்தியம் பெற்றவர்களின் திசாபுத்திகளும் சந்திக்குமாகில் பழமையாகிய பூமியினிடத்து வல்லமையுடன் பகலிற் பிறந்தவர்களுக்கு மாரகமேற்படு மென்று சொல்வாயாக எ-று. (75)

ஏறுங் குளிக னிருந்தவிரா சிக்கேழு
சேருமிரா சிக்குத் திரிகோர்ணங்—கோரச்
சனிவருங்கா லத்திரவிற் றான்பிறந்த போக
னனிமரண மாவார் நவில்.

(இ-ள்) ஆண்சிம்மத்தையொத்த குளிகனானவன் எந்த ராசியில் இருக்கின்றானோ அந்தராசிக் கேழாமிடத்திற்கு ஐந்தாமிடம, ஒன்பதாமிடத்திற் சனியானவன் வந்திருக்கின்றானோ அக்காலத்தில் இரவிற் பிறந்தவர்களுக்கு மாரகமேற்படுமென்று சொல்வாயாக எ-று. (76)

குறிப்பு: சிலர், குளிகன் எந்தவீட்டிலிருக்கின்றானோ அந்தவீட்டுக்குடையவன் எந்தவீட்டிற்போயிருக்கின்றானோ அந்தவீட்டிற்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்தில் சனிவருங் காலத்தில் மரண மேற்படுமென்று சொல்கிறார்கள்.

பன்னுமட்ட மாதிபதி யிருந்த ராசிக்கு
மன்னுந் திரிகோண மாதமாந்—துன்னுமந்த
மாதத்தி லேமரண மாந்த ருடவயதைச்
சோதித்துச் சொல்வாய் துணிந்து.

(இ-ள்) எட்டாமிடத்திற்குடையவன், எந்த ராசியில் இருக்கின்றானோ அந்த ராசிக்கித் திரிகோண ஸ்தானமாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திற்குடைய மாதமெதுவோ அந்த மாதத்தில் மாரகாதிபத்தியம் பெற்றவர்களின் திசா புத்திகளும் சம்மந்தப்படுமாகில் அந்த மாதத்தில் மரண மேற்படுமென்று சொல்வாயாக. எ-று. (77)

இரவி யிருக்கு மிராசிக்கு நேச
மருவுந் திரிகோண மன்னி—வருகின்ற
நட்சத் திரத்தின் மரணம்ந்த நாதனுக்குச்
சொட்சேத் திரமறிந்து சொல்.

(இ-ள்) மாரகாதிபர்களின் திசாபுத்திகளில் சம்பந்த மாதத்தில் சூரியனிருக்கின்ற ராசிக்குத் திரிகோண ஸ்தான மாகிய ஐந்தாமிடம் ஒன்பதாமிடத்திற் குடையவர்களின் சொட்சேத்திர ராசிக்குடைய நட்சத்திரங்களில் மாந்தர் களுக்கு மாரகமுண்டாம். எ-று. (78)

இலக்கினத்தோ னங்கிசங்க ளேறுமிரா சிக்குப்
பெலத்ததிரி கோணம் பிழையா—விலக்கினமா
மிந்த விலக்கினத்தி லேமரண மென்றறிவாய்
கந்த மலர்க்குழலீர் கண்டு.

(இ-ள்) ஜென்ம லக்கினத்திற்குடையவன் நவாம்ச ராசியில் எந்த வீட்டில் இருக்கின்றானோ அந்த வீட்டிற்குத் திரிகோண ஸ்தானமாகிய ஐந்தாமிடம் ஒன்பதாமிடத்தில் பெலம்பொருந்தியஸ்தானமெதுவோ அந்தஸ்தானத்திற்குரிய இலக்கினம் எதுவோ? அந்த லக்கினத்தில் வாசனை தங்கிய மலர்மாலைகளைக் கொண்டையிற்சூடும் ஒண்டொடியே மண் டலத்துதித்த மாந்தர்களுக்கு மரணமுண்டாமென்று கண்டு சொல்வாய். எ-று. (79)

ஒன்பது நிலை மாரகங்கண் டாய்வருட மாதஞ்
செயநா ளிலக்கினங்க டேர்ந்தே—நயமாய்
நிரியாண காலங்க ணிச்சயமாய்ச் சொல்லும்
பேரியோர் பெரியரெனப் பேசு.

(இ-ள்) ஒரு சாதகனுக்கு வரக்கூடிய மாரகத்தின், வருடம், மாதம், நட்சத்திரம், இலக்கினம் முதலான விபரங் களையறிந்து நிச்சயமாகச் சொல்லக்கூடிய வல்லமையுடைய பெரியோர்களை உயர்வாகிய பெரியோர்களென்று இவ்வுலகம் சொல்லும். எ-று. (80)

புத்திரதோடம்

அஞ்சொன்பா னென்றி லரவு சனிகுளிகன்
மிஞ்சவே நோக்க மிகவிருக்க—வஞ்சியரே
சற்பத்தைக்கொன்றதினாற்சந்ததிக்கேடாகுமென்று
விற்பத்தி சொன்னோம் விரைந்து.

(இ-ள்) இராகு, கேது, சனி, மாந்தி, இவர்கள் நால்வரும், தனித்தேனும், சேர்ந்தேனும் இலக்கினம், ஐந்தாமிடம் ஒன்பதாமிடத்தில் இருந்தாலும். அல்லது, வேறிடங்களிலிருந்து மேற்படி ஸ்தானங்களைப் பார்த்தாலும். பெண்களிற் சிறந்த பெண்ணரசே அன்னவர்கள் பன்னகத்தைக்கொன்ற பாபத்தினால் புத்திரதோஷமுண்டாமென்று சீக்கிரமாகச் சொல்வாய் எ-று. (81)

கிரகங்களின் நட்பாட்சியுச்சபகை நீசஸ்தானங்கள்.

சூரியன்

ஆதித்தற் காட்சி யரிதனுசு மீனுறவு
கோதற்ற வாடுச்சங் கோனீசம்—பேதித்துச்
சொல்லாத ராசியோ ரேழும் பகைசொல்வர்
அல்லார் குழலா யறி.

(இ-ள்) சூரியனுக்குச் சிம்மம், ஆட்சி. தனுசு, மீனம், நட்பு. மேடம், உச்சம். துலாம், நீசம். இடபம், மிதுனம், கடகம், கன்னி, விருட்சிகம், மகரம், கும்பம் இவ்வேழு ராசியும், பகையாமென்று இருட்டை மருட்டிய கூந்தலையுடைய பெண்ணே நீ, சொல்வாயாக எ-று. (82)

சந்திரன்

சந்திரற்கு நண்டாட்சி தண்டுவில்மீன் பெண்டுறவு
வந்திடப முச்சமென மன்னுமே—முந்தவே
நீசந்தே ளாகும் நிலையைந்து ராசிகளும்
பேசும் பகையெனவே பேண்.

(இ-ள்) சந்திரனுக்கு, கடகம், ஆட்சி. மிதுனம்,கன்னி, தனுசு, மீனம், நட்பு. இடபம், உச்சம். விருட்சிகம், நீசம்.

மேடம், சிம்மம், துலாம், மகரம், கும்பம் இவ்வைந்து ராசிகளும், பகையென்று சொல்வாயாக எ-று. (83)

செவ்வாய்

சேய்க்காடு தேளாட்சி தெண்டெருது கோலரிவை
வாய்த்தநட் புச்சமே மானாகும்—தேய்த்துநகர்
நண்டதுவே நீசம் நலமமையா தாகிவரும்
பண்டுரையா நான்கும் பகை.

(இ-ள்) செவ்வாய்க்கு, மேடம், விருட்சிகம, ஆட்சி. இடபம், மிதுனம், கன்னி, துலாம், நட்பு. மகரம், உச்சம். கடகம், நீசம். நன்மையில்லாத தனுசு, கும்பம்,மீனம், சிம்மம், இந்நான்கிராசியும், பகையாமென்று சொல்வாயாக எ-று.(84)

புதன்.

புதன்மங்கை தண்டாட்சி பொற்றொடியா ளுச்சம்
நிதம்பகையாஞ் சிங்கம்மீ னீசம்—இதம்பெறவே
சாற்றரிய ராசியிரு நான்கையு மேதாலத்
தேற்றமுயர் நட்பாகத் தேர்.

(இ-ள்) புதனுக்கு, மிதுனம், கன்னி ஆட்சி. மேற்படி கன்னி பதினைந்து பாகைவரை உச்சம். சிம்மம் பகை. மீனம் நீசம். மேடம், இடபம், கடகம் துலாம், விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம் இவ்வெட்டு ராசியும் நட்பென்று தெரிவாயாக. எ-று. (85)

வியாழன்.

பொன்மீனம் வில்லாட்சி போராடு தேட்பகையாந்
துன்னலவ னுச்சஞ் சுருநீசம்—பொன்மலைபோற்
பாரதன மாதரசே பற்றியவோ ராறிடமுஞ்
சேரவுற வென்றிதனைச் செப்பு.

(இ-ள்) வியாழனுக்கு, தனுசு, மீனம், ஆட்சி. மேடம், விருட்சிகம், பகை. கடகம் உச்சம். மகரம், நீசம். இடபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் இவ்வாறு இடங்களும், பொன்மலைக் கொப்பாகிய தனபாரங்களையுடைய பூவையர்க்கரசே நட்பாமென்று சொல்வாயாக. எ-று. (86)

சுக்கிரன்.

புகரேறு கோலாட்சி பொங்கலைமீ னுச்சம்
நிகரற்ற கன்னியதே நீசம்—பகராய்
குடந்தேள் சமன்பகையாங் கூறுத ராசி
தொடர்ந்தே தொகையுறவாய்ச் சொல்.

(இ-ள்) சுக்கிரனுக்கு, இடபம், துலாம், ஆட்சி. மீனம் உச்சம். கன்னி, நீசம். கும்பம், சமம். விருட்சிகம், பகை. மேடம், மிதுனம், கடகம், சிம்மம், தனுசு, மகரம் இவ்வாறிடங்களும் நட்பென்றறிந்து சொல்வாயாக. எ-று. (87)

சனி.

மந்தனுக்குக் கும்பம் மகரமே ஆட்சியதாம்
சொந்தவுச்சங் கோலாகச் சொல்லலாம்-முந்துவிதி
யாடென்றே நீச மரியபகை நண்டரியாம்
நீடுமிரு மூன்றுறவாய் நேர்.

(இ,ள்) சனிக்கு கும்பம், மகரம், ஆட்சி. துலாம், உச்சம். மேடம், நீசம். கடகம், சிம்மம், பகை. இடபம், மிதுனம், கன்னி, விருட்சிகம், தனுசு, மீனம், இவ்வாறிடங்களும் நட்பாமென்று அறிந்துகொள்வாய் எ-று. (88)

இராகு.

காரரவுக் காடேறு கற்கடகம் வல்லுறவாம்
சீருலவு மாட்சிபெண் டேளாகும்—ஆரணங்கே
நின்குயநேர் கும்பமுச்சம் நீணிறைமான் மீன்பகையாந்
தன்னிடையே கோளரி நீ சம்.

(இ-ள்) இராகுவுக்கு மேடம், இடபம், கடகம், நட்பு. கன்னி, விருட்சிகம், ஆட்சி. ஓ, பெண்ணே நினது தனத்தைப்போன்ற கும்பம், உச்சம். சிம்மம், நீசம். மிதுனம், துலாம், தனுசு, மகரம், மீனம், இவ்வைந்திடமும் பகையாமென்று தெரிந்து கொள்வாயாக எ-று. (89)

கேது.

செம்பாம்புக் காடுந் தெரிவை யுறவுச்சம்
அம்மிதுனந் தேளா மதிநீசம்—அம்பெருது
மன்னுதுலை மீனம் மகரஞ்சா லிந்நான்கும்
பன்னுட்சி யென்றே பகர்.

(இ-ள்) கேதுவுக்கு மேடம், கன்னி, நட்பு. மிதுனம், விருட்சிகம், உச்சம். தனுசு, இடபம், நீசம். துலாம், மகரம், கும்பம், மீனம், இந்நான்கிராசியும் ஆட்சி. கடகம் சிம்மம், பகையாமென்று சொல்வாயாக எ-று. (90)

குளிகன்.

சீர்த்தகுளி கற்குநண்டு தேளுறவாஞ் சேல்விடையோ
டார்த்தவரி சால்பகையென் றுகிடுமே—சேர்த்தபெரும்
வில்லோடா டுச்சம் மிதுனந் துலைநீசம்
நல்லாட்சி கன்னிமக ரம்.

(இ-ள்) குளிகனுக்கு கடகம், விருட்சிகம், நட்பு. இடபம், சிம்மம், கும்பம், மீனம், பகை. தனுசு, மேடம், உச்சம். மிதுனம், துலாம், நீசம். கன்னி, மகரம், ஆட்சியென்று தெரிந்துகொள்வாய் எ-று. (91)

இராசியில் ஆண்பெண் பிறக்குங்காலம்.

சரமுன் னரிவையாஞ் சாற்றதற்குப் பின்பிரண்டாண்
திரமுனிரண் டாண்பின்பெண் செப்பில் — உரமுடனே
தோன்றுபய முன்பின்னாண் சொல்லில் நடுப்பெண்ணாம்
மூன்றுகூ றாக மூடி.

(இ-ள்) ஒரு ராசியை மூன்றுபங்கு செய்வதிற் சரராசிக்கு முற்பங்கிற் பெண்குழந்தையாகவும் இரண்டாம்பங்கிலும், மூன்றாம்பங்கிலும், ஆண்குழந்தைகளாவும். திரராசிக்கு முற்பங்கிலும், இரண்டாம்பங்கிலும், ஆண்குழந்தைகளாகவும். மூன்றாம்பங்கிற் பெண்குழந்தையாகவும். உபயராசிக்கு முற்பங்கிலும், மூன்றாம்பங்கிலும், ஆண்குழந்தைகளாகவும். இரண்டாம்பங்கிற் பெண்குழந்தையாகவும். பிறக்குமென்று சொல்வாயாக எ-று. (92)

பாசகாதிபர்கள்.

கூறும் பலனைக் கொடுவென்போன் போதகனும்
வேறுபண்ணித் தட்டுவிப்போன் வேதகனும்—தேறுபலன்
கூட்டுவிப்போன் பாசகனுங் கோல மகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீ வான்.

(இ-ள்) ஒரு சாதகனுக்கு இயற்கையாக வருகும் கிரகங்களின் திசாகாலங்களில். அன்னவர்கள் கொடுக்கக்கூடிய சுபபலன்களையோ அல்லது அசுபபலன்களையோ, கொடுக்

கும்படி செய்கின்ற வல்லமையுடையவன் போதகனும். அவ்விதங்கொடுக்கக்கூடிய பலன்களின் இயற்கையைத் தடுத்து மாறுபாடாகிய பலன்களைக் கொடுக்கும்படி செய்கின்ற வல்லமையுடையவன் வேதகனும். இவ்விருவர்களும் இயற்கையாகக் கொடுக்கின்ற பலன்களை அதிகமாகக் கொடுக்கும்படி செய்கின்ற வல்லமையுடையவன் பாசகனும். அத்திசைகளில் திரவியங்களைக் கொடுக்கக்கூடிய வல்லமையுடையவன் காரகனும் எ-று. (93)

சூரியன்திசை.

[illegible]னு திசைக்குமந்தன் பாசகனுஞ் சுக்கிரனே
[illegible]னகேள் வேதகனுமன்னவனே—தேனனையாய்
[illegible]னுஞ் செவ்வாயோ காசினியோர் தாமறிய
தாரணியும் போதகனு மே.

(இ-ள்) மானினங்களைக் கண்களாலும், கிள்ளைகளை விள்ளக்கூடிய சொற்களாலும் மருட்டியபெண்பாவாய் இப்பூமியிலுள்ளவர்கள் அறிந்து கொள்ளும்படியாக நீ, சூரியன் மகாதிசையில் சனியானவன் பாசகனென்றும். சுக்கிரனானவன் வேதகனென்றும். வியாழனானவன் காரகனென்றும் மலர்மாலையைத் தரித்த செவ்வாயானவன் போதகனென்றுஞ் சொல்வாயாக எ-று. (94)

சந்திரன்திசை.

இந்து திசைக்குவெள்ளி யேற்றதோர் பாசகனும்
விந்தைமலர் நண்பனே வேதகனும்—மந்தனே
கங்கா நதிபுடைசூழ் காசினியிற் காரகனும்
அங்கா ரகன்போ தகன்.

(இ-ள் தேவர்களாலும் முனிவர்களாலும் புகழப்பெற்ற கங்காநதி சூழ்ந்த இப்பூமியிற் பிறந்தவர்களுக்கு வரக்கூடிய சந்திரன் மகாதிசையில் சுக்கிரனானவன் பாசகனும். செந்தாமரை மலரின் நாயகனாகிய சூரியனானவன் வேதகனும். சனியானவன், காரகனும். செவ்வாயானவன், போதகனும். எ-று. (95)

செவ்வாய்திசை.

மங்கலனார் தன்திசைக்கு மார்த்தண்டன் பாசகனும்
திங்களுமே போதகனுஞ் சேயிழையீர்-பொங்குபுகழ்
ஏயபுதன் வேதகனு மித்தரணி யோரறிய
ஆயசனி காரகனே யாம்.

(இ-ள்) செவ்வாய் மகாதிசையில் சூரியனானவன் பாசகனும். சந்திரனானவன் போதகனும். எங்கும் புகழ்பெற்ற கல்வியில் வல்லபுதனானவன் வேதகனும். சனியானவன் காரகனுமென்று சேடியர்சூழுஞ் சேயிழையே நீ, இப்புவியிலுள்ளவர்கள் அறிந்து கொள்ளும்படியாகச் சொல்லக் கடவாய் எ-று. (96)

புதன்திசை.

புந்தி திசைக்குப் புரவலனே போதகனும்
சந்திரனே பாசகனுந் தானவ—னிந்து நுதல்
மின்னனையீர் செவ்வாயோ வேதகனும்வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனு வான்.

(இ-ள்) சந்திரனையொத்த முகத்தையும் மின்னலையொத்த இடையையும் உடையபெண்ணே புதன்மகாதிசையில் வியாழனானவன் போதகனென்றும், சந்திரனானவன் பாச

Ratnasamy

வேலம்மா

(இ-ள்) மேற்சொல்லிய பாசகாதிபர் நால்வர்களுக்கு புத்திகளில் நடக்கக்கூடிய பலன்களை ஆராய்ந்து மன ஆலோசனை புரிந்து இப்புவியிற் பிறந்தவர்களுக்குச் செ னும் பலன்கள் ஒன்றுந் தவறுதென்று ஒண்டொடி மெ னும் பொற்றொடியே தெரிந்து கொள்வாய் எ-று. (102)

ஆதிவை காசிமதி யைந்திற் சதாசிவனுஞ்
சோதிடத்தை வெண்பாவாய்ச் சொல்லினான்—நீதிவள
கேசனென வாழ்ந்திடுவர் கீர்த்திமிகுங் கற்றவர்க்கு
ஈசனரு ளுண்டென் றியம்பு.

(இ-ள்) பிரபவ வருஷம், வைகாசிமாசம், ஐ... திங்கட்கிழமை யன்றையதினம் ...தாசிவசோதிட... வெண்பாவாக இச்சந்திரகாவி...த்தைப் பாடினார் ... நூலைக் கற்றுச் சோதிடஞ்சொல்ல நில்லவர்களுக்கு அளகாபுரிக் கரசனாகிய குபேரனைப்போன்ற செல்வமும் கல்வியில் வல்ல புலவர்கள் புகழ்ந்து சொல்லும்படியான கீர்த்தியும், பரமேச் சுரன் திருவருளும் உண்டாகும் எ-று. (103)

சந்திர காவியம்,

முற்றிற்று.

Printed at the Vivekananda Press, Madura:—36.